ஞானசம்பந்த

மலர் 10.] கரஹு புரட்டாசி௴ 10—10—51. [இதழ் 1

வெண்டாமரைக்கன்றி நின்பதம்தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொலோ?

—குமரகுருப

ஆசிரியர்: நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர்: ச. தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீன

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள் - உரைவளம்

பொருட்பால்

அறத்துப்பாலைப் போலவே உரைப்பகுதி, உரை விளக்கப்பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி, இவைகள் அடங்கியன.

சிறப்பாகத் தொகுப்புரை, முதுமொழிவெண்பாக்கள், பழமொழிப்பகுதிகள், குறிப்புரை ஆகிய இவைகளும் இப்பதிப்பில் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

M. O. மூலம் முன்பணம் அனுப்பிப் பெறவேண்டும்.

கிரௌன் 1×4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0

தபாற்செலவு வகையரு ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:

செயலாளர்,
ஞானசம்பந்தம் காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.
தஞ்சாவூர் ஜில்லா.

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 10] கரஜ புரட்டாசி௴ 10—10—51. [இதழ் 11

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

இராமேஸ்வர யாத்திரை

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சென்ற ஆண்டு காசியாத்திரையை, ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருவருள் துணைகொண்டு மிக வெற்றிகரமாக முடித்தார்கள் என்பதைத் தமிழுலகம் நன்கு அறிந்ததே. இந்த ஆண்டு இராமேஸ்வர யாத்திரைக்காக எழுந்தருளியானார்கள். இவர்களின் யாத்திரையால் இவர்கள் இயற்றியருளும் சிவபுண்ணியங்களும், சிவதரிசனங்களும் ஒருபுறம்; மற்றொருபுறம் இவர்களைத் தரிசிக்கும் பக்தர்களுடைய பேரன்பால் விளையும் சமய அன்பின் காட்சி; ஒருபுறம் ஆங்காங்கு நிகழ்த்தப்பெறும் உபதேசங்களைக் கேட்டு மக்கள் அடையும் ஆனந்தம். இவ்வண்ணம் யாத்திரை வெற்றிகரமாக முடிய 20—9—51 வியாழக்கிழமை ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானிடம் விடைபெற்றுக்கொண்டார்கள். விசேஷ அபிஷேக அலங்காரங்களும், பஞ்சமுகார்ச்சனையும் நடைபெற்றன.

மறுநாள் 21—9—51 வெள்ளிக்கிழமை திருக்கடவூரில் அன்னை அபிராமியின் அருள் விடைபெற ஆராதனைகள் நடைபெற்றன.

22—9—51 இரவு 9½ மணிக்கு மோட்டார் வாகனத்தில் எழுந்தருளினார்கள். அடியார்களும், மாணவர்களும், ஆசிரியர்களும், காரியஸ்தர்களும் வழியனுப்பினார்கள். புறப்படும்பொழுது மகாசந்நிதானமவர்கள் ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானிடம் விடை பெற்றுக்கொண்ட காட்சி எல்லோருடைய மனத்தையும் உருக்குவதாக இருந்தது. மடத்தின் வடக்குத்திருவாயில் வரையில் அன்பர்கள் அனைவரும் உடன்வந்து வழியனுப்பினார்கள்.

இரவு 12 மணி இருக்கும்; திருச்சியைச் சென்றடைந்தார்கள். அங்குத் தருமபுர ஆதீனத்தைச்சேர்ந்த திருச்சி மௌனமடத்தில் விசேஷ வரவேற்பு நடந்தது. வைதீகமுறைப்படி மகாசந்நிதானமவர்கள் கொலுவீற்றிருந்தருளினார்கள். பல பிரமுகர்களும், சைவ அன்பர்களும் அருட்பிரசாதம் பெற்று மகிழ்ந்தார்கள்.

23—9—51௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு இராமநாதபுரம் அரண்மனையில் விசேஷ வரவேற்பு நிகழ்ந்தது. சுமார் மூவாயிரம் மக்கள் குழுமியிருந்தார்கள். மகாசந்நிதானமவர்களுக்கு வரவேற்பு வாசித்தளிக்கப்பெற்றது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சமயநம்பிக்கை மக்கள் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டும் என்பதை விளக்கி, வாரவழிபாடு அமைத்துக் கொண்டு யாவரும் ஒருங்கு சேர்ந்து கோயிலுக்குச் சென்று வழிபட்டுவருவது மிகச் சிறந்தது என்பதையும் வற்புறுத்தினார்கள். அன்றிரவே இரயில் மூலமாக இரவு 12-10க்கு இராமேஸ்வரத்திற்கு எழுந்தருளியானார்கள்.

இராமேஸ்வரத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் விஜயத்தை முன்னிட்டுத் திருப்பணந்தாள்

ஸ்ரீகாசிமடத்ததிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான்சுவாமிகள், கார்பார் முதலிய சிறந்த காரியஸ்தர்களை அனுப்பித் தக்கஏற்பாடுகள் செய்திருந்தார்கள். தேவஸ்தானத்தின் சார்பாக யானை முதலிய விருதுகளுடன் இரயில்வே நிலையத்தில் வந்து குழுமியிருந்தார்கள். மகாசந்நிதானம் அவர்கள் ஆடம்பரமற்ற முறையிலே செல்லவேண்டும் என்ற திருவுள்ளத்தால் எல்லாவற்றையும் போகச் சொல்லிவிட்டு ரயில்வே நிலையத்திலிருந்து ஒன்றரை மைலுக்கு அப்பாலுள்ள தேவஸ்தான விருந்தினர் மாளிகைக்கு நடந்தே எழுந்தருளினார்கள். இராமேஸ்வர வாசிகள் இவர்களின் எளிவந்த தன்மையைப் பலபடப் பாராட்டிப் பேசினார்கள்.

மறுநாள் 24—9—51உ திங்கட்கிழமை காலை 5மணி; சந்நிதிக்கடலாகிய அக்கினி தீர்த்தத்தில் திருமஞ்சனம் நடந்தேறியது. அன்று உச்சிக்காலத்தில் மகா ருத்திர ஜபத்தோடு ஸ்ரீ இராமநாதப் பெருமானுக்குக் கங்கை அபிஷேகிக்கப்பட்டது. ஸ்ரீ பர்வதவர்த்தனி முதலிய ஏனைய பரிவாரங்களுக்கும் விசேஷ அபிஷேக அலங்காரங்கள் முறையாகச் செய்விக்கப்பட்டன. மத்தியானம் மாகேசுவரபூஜையும் வெகுசிறப்பாகவே ஸ்ரீ காசிமடத்துச் சார்பில் நடந்தேறியது. மகா சந்நிதானமவர்கள் திருக்கோவில் முகப்பிலே ஏழைகளுக்கு அன்னம் வழங்கினார்கள். அன்று இரவு 7-மணிக்குக் கல்யாணமண்டபத்தில் மகாசந்நிதானம் அவர்களுக்குப் பொதுமக்கள் சார்பில் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப் பெற்றது. ஆதீனப்புலவர் தண்டபாணி தேசிகர் மகா சந்நிதானமவர்கள் ஆணையின் வண்ணம் 'வாரவழிபாடு' என்பதுபற்றிப் பேசினார். ஆசிகூறும் வாயிலாக மகா சந்நிதானம் அவர்கள் மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை அவசியம் என்றும், வாரம் ஒரு முறையாவது கூட்டுப் பிரார்த்தனை நடத்தவேண்டும் என்றும் நன்கு விளக்கிப்பேசினார்கள். அர்ச்சனை வழிபாடுகளை முடித்துக்கொண்டு இரவு மணி 12-10க்கு ரயில்வேநிலையத்

திற்கு நடந்து எழுந்தருளி, தனுஷ்கோடிக்கு யாத்திரை யானார்கள். இரவில 9-மணிககுத் தனுஷகோடி போய்ச் சேர்ந்தது. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள ஜாகைக் காகத் தஞ்சாவூர்ராஜாவிடுதியில தக்க ஏற்பாடுசெய்யப் பட்டிருந்தது. அங்கிருநது ஸநானகட்டம் இரண்டரை கல தொலைவு இருககும். நல்லவேளையாக மழை பெய் திருநதமையால் நடநதுசெலல வசதியாயிற்று. தனுஷ் கோடியில விதிப்படி வஸதிரதானமும, சுவர்ண தான மும் செய்து நீராடினார்கள். காசியைப்போலவே இங்கும் ஞான பிதாவாகிய 24 குருமகாசந்நிதானஙகளுடைய திருநாமஙகளையும சொல்லி, குருத்தோத்திரம் செய்து ஒவ்வொருவருககும் ஒவ்வொரு ஸ்நானமாகச் செய்து முடித்தார்கள். நண்பகல மாகேசுரபூஜை ராஜாசத்திரத் தில் நடைபெற்றது. மாலை 3-20ககுப் புறப்பட்டு 6-மணி அளவில ஷண்முக இராஜேஸ்வர நிலையத்திற்கு எழுந் தருளினார்கள். அங்கு ராமநாதபுரம் ஸ்ரீமான் காசிநாத துரை அவர்களால் பாதகாணிக்கை மரியாதையுடன் வரவேற்பு நிகழ்ந்தது. மறுநாட்காலை உத்தரகோச மங்கைப் பிரசாதம அரண்மனையிலேயே பார்ககப் பெற்றது. இராஜராஜேஸ்வரிககு விசேஷ வழிபாடு நடத்தப்பட்டது. அஙகிருந்து விருதுநகர், சிவகாசி வழியாக 27—9—51 வியாழக்கிழமை காலை 10-மணிக்கு திருநெல்வேலி சிந்துபூந்துறை மடத்திற்கு எழுந்தருளி னார்கள்.

மடத்தில் சைவப் பிரமுகர்கள் பலரும் மகாசந்நி தானம் அவர்களை வரவேற்க முதனாள் இரவிலிருந்தே பெருந்திரளாகக கூடியிருந்தார்கள். கொலுமண்டபம் விசேஷ அலங்காரம செய்யப்பட்டிருந்தது. அன்பர் கள் மாலை பாதகாணிக்கை இவைகளுடன் வரவேற்று உபசரித்தார்கள். மகாசந்நிதானம்அவர்களுககு அன்று மௌனவிரதமாகையால் அனைவரும அருள திருநீறு பெற்று மகிழ்ந்தனர். மறுநாள் வெள்ளிககிழமை; காலை பாராயண முடிந்ததும தமது அடியார் திருக கூட்டத்துடன் மகாசந்நிதானம் அவர்கள் கன்னியா

குமரிக்குப் பிரயாணமானார்கள். அன்றுமாலை நான்கு மணிக்குக் கன்னியாகுமரியை அடைந்தார்கள். இரவு விசேஷ அர்ச்சனைகளுடன் பால்மொழிக்கன்னியை வழிபட்டார்கள். மறுநாள் சனிக்கிழமையன்று உதய ஸ்நானத்தையும், வழிபாட்டையும் முடித்துக்கொண்டு, திருவனந்தபுரத்திற்கு எழுந்தருளியானார்கள். வழியில் சுசீந்திரம் சென்று ஸ்ரீ தாணுமாலயப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் பஞ்சமுகார்ச்சனையும் செய்வித்து வழிபாடாற்றினார்கள். ஏழைகளுக்கு அன்னம் வழங்கப்பெற்றது. திருவாவடுதுறையாதீன சுசீந்திரமடம் பார்வையிடப்பெற்றது. திருவனந்தபுரத்திலே ஸ்ரீ மல்லையன் செட்டியார் பங்களா ஜாகை வசதிக்காக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. அன்று பிற்பகல் காட்சிச்சாலைகளையும், சித்திரச்சாலைகளையும் பார்வையிட்டார்கள். அன்று மாலை 7½ மணி அளவில் பத்மநாபப்பெருமாளுக்கு அர்ச்சனை முதலியன செய்வித்தார்கள். தரிசனம் நடைபெற்றது.

அங்கிருந்து நாகர்கோவில் வழியாகவே திருநெல்வேலி வந்தடைந்தார்கள். அன்று ஞாயிற்றுக்கிழமை; மாலை 4-மணிக்குத் திருநெல்வேலி இந்து காலேஜ் மண்டபத்தில் காலேஜ் கமிட்டியாரால் வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது. நகரப் பிரமுகர்கள் அனைவரும் ஒருசேரக் குழுமியிருந்தனர். பெருங்கூட்டம். மகாசந்நிதானமவர்கள் வரவேற்புக்குப் பதில் கூறுமுகத்தான் மிக அழகாகப்பேசினார்கள். மகாசந்நிதானமாக இருப்பவர்கள் இப்படிப்பேசுவதுதான் நம் சமய வளர்ச்சிக்கு ஏற்றவழி என்று மக்களனைவரும் மகிழ்ந்து பாராட்டினார்கள்.

மாலை 6-மணிக்குத் தருமை அருள்பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகத்தின் சார்பாக ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் வித்துவான் மாணிக்கவாசகம்பிள்ளை, வித்துவான் சேது ரகுநாதன், கணபதி,

அருளப்பன் M. A. முதலிய பேரறிஞர்கள் சொற்பொழி வாற்றினர். மகாசந்நிதானமவர்கள் முடிவுரையும் ஆசி யுரையும் வழங்கினர்கள்.

1—10—51 திங்கட்கிழமை காலை திருச்செந்தூருககு எழுந்தருளியானர்கள். ஸகந்தபுஷ்கரணியில் திருமஞ்சன மும, விசுவரூப தரிசனமும நடைபெற்றன. காலை 10 மணிக்கு ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கோவிலும், கலவிநிலையங்களும, பெண்கள் தேவாரக் கழகமும், குமரகுருபரன் அச்சகமும், குமரகுருபரன் கலைக்கோயிலும் திருககணநோககு அருளப்பெறறன. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்களுடைய ஆணையின் வண்ணம அன்பர் திருவாளர் குமரகுருபரன பிள்ளை யவர்கள் விசேஷ மரியாதைகளுடன தாமிரபரணிக கரையிலேயே வந்து வரவேற்று உபசரித்தார்கள். மாகேஸ்வரபூஜையும அங்கு நடந்தது. பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் மிக மிகத் திறமபட நடித்தனர். பாடினர். மகாசந்நிதானம் அவர்கள் மனமுவந்து 1001 ரூபாய் நனகொடையாக அளித்து அதன் வட்டி வருவாயைககொணடு ஒவ்வொரு ஆண்டும நவராத்திரி முதல்நாள் விழாவை 21-ம மகாசநநிதானம ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முகதேசிக ஞானசமபந்த பரமாசாரிய சுவாமிகளின் ஞாபகமாக நடத்திவரவேண்டும என்று ஆணை தந்து ஸ்ரீ குமரகுருபரன பிள்ளை அவர்களிடம் தொகையினை அளிததருளினர்கள். அன்று மாலை குமரகுருபரன் உயர்நிலைப்பளளியில் பொதுககூட்டம் நடைபெற்றது; பொதுமககளாலும பள்ளி நிர்வாகிக ளாலும் வரவேற்புப்பத்திரங்கள் வாசித்து அளிககப் பட்டன.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சைவத்தின் மாட்சியினையும, சைவத்திற்குக குமரகுருபரசுவாமிகள செய்த அருந்தொண்டையும, அவர்களுககு நாம காட்ட வேண்டிய அளவிலலாத அன்பின் நிலையையும், அதனை

அறிந்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் காட்டிவரும் வள்ளன்மையையும பலபடப் பாராட்டிப் பேசினூர்கள். முடிவாக வாகீசர் பெயர் விளங்கச்செய்த அப்பூதியடிகளே நமது அருள்நந்தி அடிகள் என்று அருளினூர்கள்.

ஸ்ரீ கயிலாசநாதர் வழிபாடும் கள்ளபிரான் வழிபாடும் சிறப்பாக நடைபெற்றது இரவு 10மணி அளவில் மீண்டும திருச்செந்தூருககு எழுந்தருளினூர்கள். மறுநாள் உதயமார்த்தாண்டமுதல் ஒவ்வொரு காலமும் வழிபாடு செய்தார்கள். உச்சிககாலத்தில மகாபிஷேகம், கங்காபிஷேகம் நடத்தப் பெற்றது. பல ஆயிரக் கணககான மககளுககு அன்னம அளிக்கப்பட்டது. ஆயிரம் பிராமணர்களுக்கும் அன்னமளிககப்பட்டது. அங்கு மாகேசுவர பூஜை நடைபெற்றது. திருச்செந்தூர் சைவவேளாளக் கல்விச் சங்கததாரால் வாழத்துககள் வாசித்தளிககப்பட்டன.

மாலை 6-மணிககுக் குலசேகரன் பட்டினத்திற்கு எழுந்தருளினூர்கள். அங்கு அநாதை விடுதி, பெண்கள் பயிற்சிககல்லூரி, பெண்கள் தேவாரச்சங்கம் முதலியவற்றின் சார்பாகப் பாராட்டுப்பத்திரங்கள் வாசித்து அளிக்கப்பட்டன. மகாசந்நிதானம் அவர்கள் ஆசி அருளி விபூதிப் பிரசாதம் வழங்கினூர்கள். குலசேகரன் பட்டினத்தில் குழந்தை முதல் பெரியோர்கள்வரை காட்டிய குருபகதி மிக மெச்சத்தகுந்தது. இரவு 10-மணி அளவில் அங்கிருந்து திருச்செந்தூருக்கு எழுந்தருளி இரவு வழிபாட்டை முடித்துககொண்டு மறுநாள் காலையில் ஸ்கந்த புஷ்கரணியில் திருமஞ்சனம்செய்து விசுவரூபமும உதயமார்த்தாண்டமும தரிசனம்செய்து கொண்டு பாளையங்கோட்டை வழியாகப் பாபநாசத்திற்கு எழுந்தருளினூர்கள். பாபநாசத்தில் திருவாவடுதுறை ஆதீனமடத்தில் திருவாவடுதுறை ஆதீனச் சார்பாக மாகேசுவரபூஜைக்குச் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஸ்ரீமத் முத்துககுமாரத்தம்பிரான்

சுவாமிகளும் ஆதீனத்திலிருந்து வந்த காரியஸ்தர்களும் இன்ஸ்பெக்டர்களும் உபசரித்தனர்.

அம்பாசமுத்திரம் வக்கீல் உயர்திரு சிவஞானம் பிள்ளை அவர்களும், அவர்கள் மூத்த மாப்பிள்ளை ஸ்ரீமான் மரகதசுப்பிரமணியபிள்ளை அவர்களும் கூட இருந்து பணியில் பங்குகொண்டார்கள். தாமிரபரணி அணைகளையும் மின்சார நிலையத்தையும் மகாசந்நிதானமவர்கள் மாலையில் பார்வையிட்டார்கள். பாபநாசநாதர் வழிபாடும் நடைபெற்றது. திருக்குற்றாலத்திற்கு வரும் வழியில் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த சிவசைலம் மடம் கண்காணிக்கப்பெற்றது. சிவசைலநாதர் ஆலய வழிபாடும் முறைப்படி நடைபெற்றது. அங்கிருந்து திருக்குற்றாலத்தில் திருவாவடுதுறை மடத்திற்கு எழுந்தருளினார்கள். அங்கும் திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

திருக்குற்றாலத்தில் இரண்டுநாள் எழுந்தருளியிருந்தார்கள். 5—10—51ல் பராசக்திபீடத்திற்கு மகா அபிஷேகமும், நவசக்தி அர்ச்சனையும் நடைபெற்றன. பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். திருவாவடுதுறை ஆதீனத்துத் தென்காசித் தேவாரபாடசாலை மாணவிகள் தேவார பாராயணமும், தேவாரக் கும்மி கோலாட்டங்களும் நிகழ்த்தினர் அவர்களுக்கு வஸ்திரங்களும், சீப்பு கண்ணாடி முதலியவைகளும் வழங்கப்பட்டன. மறுநாள், இராஜபாளையத்திற்கு எழுந்தருளினார்கள்.

இராஜபாளையத்தின் நகர எல்லையிலேயே ஆதீனப் பேரன்பரும், உறைப்புடைய சமயத்தொண்டரும், சற்குண சம்பன்னரும் ஆகிய ஸ்ரீமான் இராமசாமிராஜா அவர்கள் சகல மரியாதையுடனும் வரவேற்று அழைத்துச் சென்று தமது மாளிகையில் எழுந்தருளச் செய்தார்கள். இந்த சிறந்த வரவேற்பு ராஜா அவர்களுடைய பக்திப் பெருக்கினை அன்பர்களுக்கு அளந்து காட்டியது. அரசியல் அதிகாரிகள் உள்ளிட்ட உள்ளூர்ப்

பிரமுகர்கள் அனைவரும் மாலைசாத்தி வழிபாடுசெய்து விபூதிபிரசாதம், பெற்று மகிழ்ந்தனர். அவர்கள் இல்லத்திலேயே மாகேசுவர பூஜையும் நடத்திவைத்தார்கள். மகாசந்நிதானமவர்கள் அன்று மாலை ராஜபாளையம் பஞ்சாலைகளையும், நூலாலைகளையும், சின்னைய ராஜா ஞாபகார்த்த உயர்நிலைப் பள்ளியையும் பார்வையிட்டார்கள். அன்று மாலை 6-மணிக்குப் போர்டுஹைஸ்கூலில் மகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக கூட்டம நடைபெற்றது. தருமபுர ஆதீனப் பாடசாலை இசையாசிரியர் சங்கீதபூஷணம் P. சாமிநாதனால் கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்றது. நகராண்மைக் கழகச் சார்பாகவும, உயர்நிலைப்பள்ளி சார்பாகவும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன.

ஸ்ரீமத் அத்வையானந்த சுவாமிகளும், தருமபுர ஆதீன வித்துவான் ச. தணடபாணி தேசிகரும் 'சமயம்' 'இனிமை'என்பனபற்றிப்பேசினார்கள். மகாசந்நிதானம் அவர்கள சமயத்தின் இனறியமையாமை பற்றியும், சமயப் பொதுநோககு இந்நாளில அவசியம் எனவும தேவாரம, திருவாசகம, கமபர் முதலியவற்றிலிருந்து மேற்கோள் பல காட்டிக கேடபோர் பரவசமாமபடிப் பேசியருளினார்கள். ராஜபாளையப் பொதுமககள் கூர்த்த சாஸதிரவிஷயங்களையும கவனித்துக் கேட்டு மிகப்பாராட்டகூடியதாக இருககிறது.

ஸ்ரீ ராமசாமிராஜா அவர்களால் கட்டப்பெற்ற ஸ்ரீசொககநாத சுவாமி ஆலயத்திற்கு மகாசந்நிதானம அவர்கள் எழுநதருளினார்கள. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களைத் தரிசிப்பதறகாகவும அவர்களிடம விபூதிப் பிரசாதம பெற்றுக குருவருள் அடையவும் அவ்வூர் மககள் அனைவரும கூடியிருநதார்கள். மகாசந்நிதானம அவர்கள் வழிபாடு முடித்து அனைவர்கரும் விபூதிப் பிரஸாதம் வழஙகி ஜாகைககு எழுந்தருளினார்கள்.

மறுநாள் காலை 8-மணிககு தமது ஆதீனஸ்தாபக ஆசாரியார்களாகிய ஸ்ரீமத் குருஞான சமபந்த சுவாமிகளுடைய அவதார ஸதலமாகிய ஸ்ரீவில்லிபுத்தூருககு எழுநதருளினார்கள.

ஸ்ரீவிலலிபுத்தூர் இந்து ஹைஸ்கூல் கமிட்டியாரும் நகரபபிரமுகர்களும நகர எலலையில கூடி வரவேற்று அழைத்துச் சென்றார்கள். ஹைஸ்கூலில் பொதுக கூட்டம் ஏற்பாடாகி இருந்தது. ஸ்ரீ இராமசாமிராஜா

அவர்கள் இந்த ஹைஸ்கூல் வளர்ச்சிக்காக மகாசந்நிதானமவர்கள் ஐம்பதனாயிர ரூபாய் அளித்திருப்பதையும இந்தஹைஸ்கூல் அவர்கள் ஞாபகார்த்தக் கட்டிடமாக விளங்கவேண்டும் என்பதையும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் குருபக்தியில் மிகச்சிறந்தவர்களென்பதையும் எடுத்து விளக்கிப்பேசினார்கள். பின்னர் மகாசந்நிதானம அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரிலே திருவவதாரஞ்செய்தருளி, மதுரை ஆலவாயண்ணலின திருவருள நிறையப்பெற்று, திருவாரூரில் சிவஞானோபதேசமும் ஏறறு, தருமைககு வந்து மெய்கண்டசந்தான ஞானபீடாதிபதியாய் - தருமபுர ஆதீன ஸ்தாபகராய் விளங்கி, அன்றும இன்றும் என்றும அருளபாலித்து வரும் ஸ்ரீமத் குருஞானசமபந்த சுவாமிகளைப்பற்றி நீஙகள் தெரிந்துகொள்ள இந்தச் சில பாடல்களே போதும் என்று, சிவபோகசாரத்தில அருமையான பாடலகளை எடுத்துசசொலலி இங்கு இந்தப் பள்ளியில் படிககின்ற ஒவ்வொரு மாணவரும ஒவ்வொரு ஞானநூதிச் செல்வர்களாக ஆகவேண்டும என்று ஆசீர்வதிதது அதற்காக இந்த ஹைஸ்கூலுககுக குருஞானசம்பந்தர் ஹிந்து ஹைஸகூல் என்று நாமகரணம செயகின்றேன் என்றும திருவாய்மலர்நதருளினார்கள்.

பின்னர் ஜில்லா கலெக்டர் ஸ்ரீமான் உத்தண்டராம பிள்ளை அவர்கள மகாசந்நிதானமவர்களுடைய சொல் வனமையையும் தமிழ்ப்பணியையும சமயப்பணியையும் பலபடப் பாராட்டி, குருவின் நாமத்தை விளங்கச்செய்யும இந்தக குருநாதனை நாம் எப்போதும பார்த்துக கொண்டிருககவேணடும, அதற்காக இந்த உருவப் படததைத திறநதுவைககிறேன என்று தமிழின்சுவை தெரியப் பேசி மகாசந்நிதானம அவர்களுடைய திரு உருவப்படத்தைத திறநது வைத்தார்கள. நன்றியும, வாழ்த்தும கூறக கூட்டம் முடிவுற்றது.

அன்றுமாலை அங்கிருந்து புறப்பட்டு மதுரையில சொககநாத சுவாமி வழிபாடு செயது, யாத்திரையை முடித்துககொண்டு இரவு 11-மணிககுத தருமை மடாலயத்திறகு எழுந்தருளினார்கள்.

மதுரை வழிபாடு வரையில் ஸ்ரீமான் அம்பைய ராஜா அவர்களும, ராமசாமிராஜா அவர்களும கூடவேயிருநது வழியனுப்பி மகிழநதார்கள. அவர்களின் உண்மையனபு உரையளவிற்கு எட்டாத அளவு பாராட்டற்குரியது.

தருமபுர ஆதீன மடாலயத்தில்

ஆவணிமூலத் திருநாள் (9—9—51) அன்று

திருக்குறள் பொருட்பால் உரைவள வெளியீட்டு விழாவில்

விழாத்தலைவர், உயர் திருவாளர்,

டாக்டர் R. K. சண்முகஞ் செட்டியார் அவர்கள்

நிகழ்த்திய தலைமையுரை.

பெரியோர்களே! நண்பர்களே!!

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு என்னுடைய தாழ்மையான வணக்கம். இன்றையதினம் இந்தத் திருவிழாவில் நான் தலைமைவகிக்கவேண்டும் என்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்அவர்கள் எனக்குக் கட்டளையிட்டபொழுது நான் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டேன். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடைய ஊக்கத்தினாலே தருமபுர ஆதீனத்திலிருந்து தமிழ் வளர்ச்சிக்கு எவ்வளவு பெரிய வேலைகள் நடந்துகொண்டு வருகின்றன என்பதை நான் பல ஆண்டுகளாகக் கவனித்து வந்திருக்கின்றேன். அப்பெருமை வாய்ந்த ஆதீனத்தில் நடைபெறும்படியான இந்தப் பெரிய விழாவுக்கு நான் தலைமைதாங்கும்படியாக எனக்குக் கட்டளையிட்டதில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் என்னைப் பெருமைப்படுத்தி இருக்கிறார்கள் என்பதே. வரவேற்பிலே மகாசந்நிதானம் அவர்கள் சொல்லிய உரைகளை எல்லாம் அவர்களுடைய ஆசீர்வாதம் என்று நான் தாழ்மையாக ஏற்றுக் கொள்கிறேன். இந்தச் சமயத்திலே என்னுடைய நண்பராகிய திரு. சேதுப்பிள்ளை அவர்களுக்கும் மகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை கொடுத்துப் பட்டம் வழங்குவதைப் பார்ப்பது எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. என்னுடைய பாராட்டுதலையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரைப்

பற்றி மகாசந்நிதானம் அவர்கள் இப்பொழுது சொன்னதிலாவது, மாணவர் வாசித்த இந்தபாராட்டுரையிலாவது மிகைபடச் சொல்லியது என்ற குற்றமே இல்லை என்பது என்னுடைய கருத்து. சேதுப்பிள்ளை அவர்கள் நம் தமிழ்அன்னைக்குச் செய்துவரும தொண்டானது தமிழ்நாடு எங்குமே எல்லோருககும் தெரியும். மகாசந்நிதானம அவர்கள் இன்று அவருக்குச்செய்கின்ற பெருமையால் சேதுப்பிள்ளை அவர்களுக்கு இந்தத் தமிழ்த்தொண்டில் இன்னும் ஊக்கம் அதிகம் ஆகும் என்பதில் சந்தேகமே இல்லை.

இன்றையதினம் இந்த வைபவங்களோடு திருக்குறளின் பொருட்பாலும் அரங்கேற்றுதலாயிற்று. சென்ற தீபாவளியன்று நாம் எல்லோரும் இந்த ஆதீனத்திலிருந்து வெளிவந்த அறத்துப்பால் உரைவளத்தைக் கண்டு மகிழ்ந்தோம. அதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைந்து, படித்து அநுபவித்தபோது 'இப்பெரிய பொருட்பால் பகுதி வருமா' என்று எனககுச் சந்தேகம் வந்தது. அந்தச் சந்தேகத்திற்கு ஏற்ப ஒரு நண்பர் சொன்னார், 'ஆதீனத்திலிருந்து அறத்துப்பால் ஒன்று தான் வரும்; இனி மற்ற பகுதிகள் எல்லாம் வராது' என்பதாக. நான் சிறிது காலத்துககுப் பின்பு தண்டபாணி தேசிகர் அவர்களைப் பார்க்க நேர்ந்தபொழுது அவர், இந்தப் பொருட்பால் உரைவளமும் விரைவில் வந்துவிடும் என்று சொன்னதைககேட்டு நான் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தேன்.

திருககுறளின் உயிர்நாடியாகிய இந்தப் பொருட்பாலைப்பற்றிச் சிலவார்த்தைகள் நான் இங்குச்சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நான் பொருளாதாரத்தைப்பற்றி ஒரு நீண்ட பிரசங்கம் செய்யவேண்டும் என்பதாக எனககு ஆணையிட்டார்கள். ஆனலை, பொருட்பாலைப் படிக்கும்பொழுது பொருளாதாரத்திற்கும், இந்தப் பொருட்பாலுக்கும் உள்ள

பொதுவான சொல் ஒன்றுதான். பொருளாதாரத்தைப் பற்றிச் சொல்லவேண்டும் என்றார்கள் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள். பொருளைப்பற்றியது இந்தத் திருக்குறளின் பகுதி. ஆகையினாலே, அப்பொழுது பொருளாதாரம் முழுவதும் இந்தப் பொருட்பாலில் இருக்கிறதா என்ற கேள்வி பிறக்கலாம். இதற்கு விடை சொல்லுவதே கடினம். நான் இந்தப் பொருட்பாலை முதல் முதலாகப் படிக்க ஆரம்பித்தபொழுது பொருள் என்னும் சொல்லுக்குப் பொருள்என்ன என்ற சந்தேகம் வந்துவிட்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் குறிப்பிட்ட ஒவ்வொரு பொருள் இருக்க வேண்டுமே. அது எனக்குத் தோன்றவில்லை. சென்னை அகராதி - யூனிவர்ஸிடியார் வெளியிட்ட லெக்ஸிகன் என்னும் படியான அகராதி இருக்கிறதே. அதைப் பார்த்தால் எல்லாம் விளங்கிவிடும் என்று அகராதியை எடுத்துப் பார்த்தேன். அப்பொழுது இந்தப் பொருள் என்னும் சொல்லுக்கு இருபத்துநான்கு பொருள் கொடுத்திருக்கிறார்கள். அதில் எந்தப் பொருளை இந்தப் பொருட்பாலுக்குப் பொருத்தமாக எடுத்துக் கொள்ளுவது என்பது எனக்குத் தெரியவில்லை. கடைசியாக நான் என்ன முடிவுக்கு வந்தேன் என்றால் திருக்குறளில் பொருட்பால் என்று வள்ளுவர் உபயோகப்படுத்தும்படியான வார்த்தையில் பொருள் என்பதற்கு என்ன பொருள் என்றால் உலகம் முழுவதும் - உலக வாழ்க்கை முழுவதும் என்றுதான் கொள்ளவேண்டும். ஆனால் இவ்வளவு விரிவான பொருளை - அர்த்தத்தை ஒரு வார்த்தையில் ஏன் கொடுத்தார் என்றால் அது ஒரு ஆச்சரியந்தான் கொடுக்கும். அகராதியைப் பார்க்கும் பொழுது பொருள் என்பதற்குக் கடவுள் என்பதும் ஒரு அர்த்தம். ''பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்ததன்றே'' என்று சொன்னார் கம்பர். ஆகவே கடவுளுக்கே - எல்லையில்லாத அந்தப் பரம்பொருளுக்கே பொருள் என்று சொல்லும்படியான ஒரு சொல்லை உபயோகிக்கும்பொழுது, எல்லைக்குள்

அடங்கிய உலக வாழ்க்கைக்குப் பொருள் என்ற வார்த்தையை உபயோகிப்பதில் யாதொரு குற்றமும் இல்லை என்று நான் முடிவுக்கு வந்தேன்.

திருக்குறளைப் பற்றிப் பேசுவது என்றால் சில சமயங்களில் அச்சமும்வருகிறது. திருககுறள் தோன்றிய நாள்முதல இன்றுவரையில் இத்திருக்குறளைப்பற்றிச் செய்யுளிலும் வசனத்திலும் நம் தமிழ்நாட்டாரிடையே தமிழ்மககள் பேசிககொண்டே வந்திருக்கின்றார்கள். இரண்டாயிரம் வருஷங்களாகப் பேசப்பட்ட ஒருநூலைப் பற்றிப் புதிதாக எனனபேசுவது என்று நினைககும் பொழுது கொஞ்சம் மனதில அச்சம் வருகிறது. ஆனால், எத்தனை நூற்றாண்டுகளாகத் திருவள்ளுவரைப்பற்றியும் திருவள்ளுவருடைய இத்திருககுறளைப்பற்றியும் பேசிக் கொண்டு வந்தாலும், நூல்களை எழுதிககொண்டு வந்தா லும, மககள் படிககவும கேட்கவும் ஆவலோடு இருக்கி றார்கள் என்பதைப்பார்ககுமபொழுது இதற்கு எல்லை இல்லை எனலாம இன்னும எத்தனை வருஷங்கள் பேசிக் கொண்டு வநதாலும் அவரவர்களுடைய அறிவுக்குத் தோன்றியபடியும், அவரவர்களுடைய கற்பனைசக்திககுத் தோன்றியபடியும், வள்ளுவரைப் பற்றியும், அவருடைய நூலைப்பற்றியும் பேசிககொண்டுவரலாம். வள்ளுவர் நூலைப்பற்றி நான் முன்பு பலசமயங்களில் பேசிய பொழுதும், கட்டுரையாக எழுதியபொழுதும் முககிய மாக எனன கருத்தை நான் எடுத்துக கையாண்டிருக் கிறேன். உலகததிலே எல்லாக காலத்திலும, எல்லா மககளாலும், எலலா மதத்தினராலும், எல்லா நாட்டின ராலும் அங்கீகரிககககூடிய ஒரு நூல் உலகத்தில் இருககிறது எனறால அது திருககுறள்தான். இவ்வித மாக ஏதேனும ஒரு நூல் தமிழிலாவது, இன்னும் மற்ற மொழிகளிலேயாவது உண்டா என்பதைப் பற்றி என்னுடைய அறிவுககு எட்டியவரையில நான் நன்கு ஆராயந்தபோது இலலை என்னுமபடியான் முடிவுக்குத் தான் நான் வநதேன். அதற்குக காரணம் என்ன

என்று ஆராய்ந்தேன். நூல்கள் எந்தக்காலத்தில் எழுதப்பட்டபோதிலுங்கூட அந்த நூல்களில் உள்ள கருத்தை இரண்டு பாகங்களாகப் பிரிக்கலாம். வேதங்களை எடுத்துக்கொண்டபோதிலுங்கூட பகவத்கீதையை எடுத்துக்கொண்டபோதிலுங்கூட இன்னும் எவ்வளவு பெரிய மத நூல்களையோ அல்லது அறிவு நூல்களையோ எடுத்துக்கொண்டபோதிலுங்கூட அதையும் வேண்டுமானல் பாருங்கள். இரு பொருள்களாக அதன் கருத்துக்களைப் பிரிக்கலாம். ஒன்று நூலாசிரியர் வாழ்ந்த காலத்தையொட்டி, அந்தக் காலத்து மக்களுடைய மனப்பான்மை, அவர்களுடைய நாகரிகம், வாழ்க்கை இவைகளில் ஒட்டிய கருத்துக்கள் ஒரு பாகம். எல்லா நாட்டிற்கும் காலத்திற்கும் மக்களுக்கும் பொருத்தமாகிய உண்மைகள் இன்னுமொரு பாகம். இந்த உண்மைகள் நிரம்பிய நூல்கள்தான் உலகத்தில் இறவாமல் வாழ்ந்து வருகின்றன. தமிழில்மட்டும் அல்ல. எல்லாமொழிகளிலும், எல்லா நூல்களிலும் ஆனல் அந்தப் பெரிய நூல்களிலுங்கூட ஒரு சிறு பாகமாவது நூலாசிரியருடைய கால நாகரிகத்தையும், மனப்பான்மையையும் அறிவிப்பதாக இருக்கும். ஆனல் அந்தக் காலத்திலிருந்து சொல்லியது இப்பொழுது பொருந்தாது என்று பல பாகங்களை எடுத்துக்காட்டலாம். திருக்குறள் ஒன்றில்தான் எந்தக் குறளையாவது எடுத்து இது 1800 வருடங்களுக்கு முன்பு தமிழ்மக்களிடையே இருந்திருக்கலாம் பொருத்தந்தான், ஆனல், இந்த இருபதாம் நூற்றூண்டில் பொருத்தம் அல்ல என்று சொல்லுங்கள் பார்ப்போம்; சொல்ல முடியாது. ஏன் என்றால் திருக்குறள் 1330 பாட்டுக்களிலும், ஒவ்வொரு பாட்டிலும் உள்ள கருத்தும், உலகத்திற்கு மனித வாழ்க்கைக்கு அடிப்படையான உண்மையை எடுத்துச் சொல்லும்படியான ஒரு தத்துவம். அந்த உண்மைத் தத்துவத்தினுல் தான் இந்தத் திருக்குறள், வள்ளுவர் வெளியிட்டநாள் முதற்கொண்டு இன்றுவரையில் மக்களால் போற்றப்

பட்டு வருகிறது. தமிழ் மக்கள் இதைத் தங்களுடைய வேதம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

திருக்குறளினுடைய அடிப்படையான உண்மை என்ன என்று யோசிக்கவேண்டும். ஒவ்வொரு குறளிலும் உண்மை இருக்கின்றது என்று சொன்னேன். இருந்த போதிலுங்கூட நூலை முழுவதும் எடுத்துக் கொண்டு ஆராய்ந்து பார்க்கும்பொழுது இந்த நூலின் அடிப்படையான உண்மை என்ன என்று ஆராய வேண்டியது நம்முடைய கடமை. அப்படி ஆராய்ந்து அதைப்பற்றி யோசிக்கும்பொழுது நான் என்ன முடிவுக்கு வந்திருக்கின்றேன் என்றால் இந்தத் திருக் குறளில்தான் மனிதனுடைய வாழ்க்கையும், இந்த உலகமும் நிலைபெறுமல் இருப்பவை என்ற கருத்திற்கே. அது அடங்கியிருந்தபோதிலுங்கூட, மனிதன் வாழ்க் கைக்கும் உலகத்திற்கும் சிறப்பைக் கொடுத்து இருக்கிற திருக்குறளிலே இந்த ஆழ்ந்த கருத்து இருக்கிறதே; இதில் அடிப்படையானதாக இருக்கும் உண்மைகளை மேல் நாட்டார் அறிந்தார்களேயானல் அவர்கள், சாதாரணமாக நம்முடைய இந்தியர்கள்மேல் சாட்டும் படியான குற்றத்தைச் சாட்டமாட்டார்கள். அந்தக் குற்றம் என்னவென்றால் இந்தியமக்கள் உலகவாழ்க்கை யில் கொஞ்சமேனும் சிரத்தையை எடுத்துக்கொள்ளா மல் இன்னுமொரு உலகில் இருக்கும்படியான வாழ்க் கைக்குப்போய் அநுபவிக்கத்தான் முயற்சி செய்து கொண்டு வருகிறார்களே ஒழிய இந்த உலகத்தை அவர் கள் கருத்தோடு அநுபவிப்பது இல்லை என்பதே. மேல்நாட்டார் இந்த உலக வாழ்க்கையினுடைய விசே ஷத்தை அறிந்து அநுபவிக்கிறார்கள். ஆனல் அதை நம் மக்கள் சிந்திப்பது இல்லை. நம்முடைய மக்கள் எப்பொழுதும் இந்த உலகத்தை மறந்து இன்னுமொரு உலகத்தைக் கனவு கண்டுகொண்டு வாழ்கின்றார்கள்.

திருக்குறளின் அடிப்படையான உண்மையை அறிந் தால் இந்தக் குற்றத்தைச் சாட்டமாட்டார்கள். உலகத்

தினுடைய நிலையாமை, வாழ்க்கை இன்பங்களினுடைய நிலையாமை, செல்வத்தின் நிலையாமை இவைகள் எல்லாம் நமமுடைய தமிழ் நூல்களிலும் ஆரிய நூல்களிலும் பெரிய மகான்கள் எடுத்துக காட்டியிருக்கின்றார்கள். மாணிககவாசக சுவாமிகளுடைய திருவாசகத்தின் அடிப்படையான சிலகருத்துக்களை எடுத்துப்பாருங்கள். திருச்சதகம் என்னும்படியான பாகத்தைப் பழைய குறிப்பாசிரியர்கள் பக்தி வைராக்கியம் என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பக்தி, வைராக்கியம் இது தான். விசித்திரம் என்னும்படியான வார்த்தையை விட்டு விடலாம். பக்தி, வைராககியம் என்றால் என்ன? பக்தி என்பதற்கு உண்மையான பொருள் அடியார்கள் இறைவனிடத்திலே ஆறாத அன்பைக் கொள்ளுவது என்பது. அது தான் பக்தியினுடைய அடிப்படை. வைராககியம் என்பது அந்தப் பகதி காரணமாக உலகமும் உலக வாழ்க்கையும நிலையில்லாதவை என்பதாக ஆகிவிடும. ஆனல், அந்தப் பக்தியின் காரணமாக உலகமும் உலக வாழ்கையும் நிலையில்லாதவை என்று அறியுமபொழுது அப்பொழுது அறிவாளியாகிய மனிதனுடைய கடமை என்னவாகிறது? சாமானியமாக அந்த அறிவை அடைகின்றவர்கள் துறவிகளாகி விடுகின்றார்கள். உலகத்தையே வெறுத்து விடுகின்றார்கள். மக்களையும், சுற்றத்தாரையும் வெறுத்து விடுகின்றார்கள். ஆனல், அந்த மனப்பான்மை இருககிறதே அது பக்திக்குப் பொருந்தாத மனப்பான்மை. ஒரு அடியானுடைய மனமாகப்பட்டது இறைவனை அறிந்து இறைவனிடத்தில் அளவில்லாத அன்பைக் கொண்டிருக்கும்பொழுது உலகத்தின்பேரிலாவது, தன்னுடைய மக்களின்பேரிலாவது எந்த மனிதனுககும் வெறுப்பு வரமுடியுமா என்று கேட்கிறேன். அன்பே குடிகொண்ட இறைவன் பேரில் அன்பு வருமபொழுது அந்த அன்பின் மூலமாக எல்லாப் பொருள்களையும், மக்களையும் அன்புடன் ஆதரிகக வேண்டியது பகதியின் கடமையாகிறது. ஆகையால் உலகத்தை வெறுத்துவிட்டுப் போகும்படி

யான துறவி- காட்டுக்குப் போகிற துறவி, இறைவன் பேரில் உண்டாகின்ற பக்தியால் தான் அநுபவிக்கும் அன்பை மறந்து விடுகின்றார். மக்களைப் பற்றியும், உலகத்தைப் பற்றியும் நினைப்பதில்லை. இது அவசிய மில்லை. அந்தப் பக்தியினால் மக்களைப் பற்றியும், உலகத்தின்மேலும் அன்புவளரவேண்டும்.

மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனைக் கண்ணாலே கண்டிருக்கின்றார். இறைவனிடத்து அன்புவந்தது மட்டும் அல்ல. இறைவனைக் கண்ணாலேயும் கண்டு விட்டார். அப்படியிருக்கும்பொழுது இறைவன் 99 சீடர்களைமட்டும் பொய்கையில் தோன்றும்படியாக- நெருப்பில் மறையும்படியாக ஆணையிட்டு, மாணிக்க வாசகர் ஒருவரைமட்டும் 'இங்கே இரு' என்று ஏன் விட்டுவிட்டுப் போனார்? இந்தக் குறையினாலேதான்- துக்கத்தினாலேதான் நீத்தல் விண்ணப்பம் என்ற பாட்டைப் பாடினார். ஆனால், இறைவனுடைய ஆணையின் கருத்து என்ன? நீ என்னைக் கண்டுவிட்டபோதிலுங்கூட நீ உலகத்தில் இன்னும் சிறிதுகாலம் வாழ்ந்து உலகத்திற்கும், உலக மக்களுக்கும் உன்னுடைய கடமையை - தொண்டைச் செலுத்தவேண்டும் என்னும்படியான ஆணை. இதை நிறைவேற்றிவிட்டுத்தான் மாணிக்க வாசகரும் மறைந்தார். அதிலிருந்து என்ன பெரிய தத்துவத்தை நாம் அறிகிறோம் என்றால் உண்மையான பக்தியில் ஈடுபட்டபிறகு, உலகத்திலும், உலக மக்களிடத்திலும் அன்பு அதிகமாகி உலக மக்களுக்கு நாம் செய்யவேண்டிய தொண்டும் பெரிய கடமை என்று நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதில்தான் உலகத்தினுடைய பெருமை இருக்கிறது. அந்தப் பெருமையைத் தான் அடிப்படையாக வைத்துவிட்டார் திருவள்ளுவர். திருவள்ளுவருடைய 133 அதிகாரங்களிலே துறவறம் என்பதைப் பற்றி ஒரு பத்துப் பாட்டுக்களில் பாடியிருக்கிறார். அதற்கு ஒரு பெருமையைக் கொடுத்து விட்டார். உண்மையாக உலகத்தை வெறுக்காமல்

துறவிகளாக இருக்கிறவர்களைப்பற்றிச் சொல்லிவிட்டார் அதிகம் விளக்காமல். பாக்கி இருக்கிற எல்லோரும் இல்வாழ்வைப் பற்றித் தூய்மையாக வாழ்கிறார்கள்.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்.

நீ அறத்தின்வழியாக நின்று இல்லற வாழ்க்கையைச் சரியாக நடத்தாமல் துறவியாகப்போய் என்ன அறத்தினைப் பெறப்போகிறாய்? இந்த இல்லறவாழ்க்கையில் மோட்சம் அடைந்துவிட்டாய் என்றால் துறவு வாழ்க்கையிலும் மோட்சம் அடைந்துவிட்டாய் என்றுகிறது. இந்தக் கருத்தை அடிப்படையாக அவர் பொருட்பாவில் புகுத்திவிட்டார். அதனல்தான் பொருட்பாலாகப்பட்டது திருக்குறளின் உயிர்நாடி என்று நான் சொன்னேன். ஆனல் அந்த உயிர்நாடிக்கு ஒரு பெரிய கட்டுப்பாடு வைத்துவிட்டார். பொருள் என்பதில் அரசனைப் பற்றியும், அமைச்சர்களைப்பற்றியும், நண்பர்களைப்பற்றியும், செல்வத்தைப்பற்றியும், வாழ்க்கையைப்பற்றியும், உலகத்தில் மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதது என்ன என்ன இருக்கிறதோ அவைகளைப் பற்றியும் சொல்லிவிட்டார். ஆனல் இவைகளுக்கெல்லாம் ஒரு கண்டிஷன் கட்டுப்பாடு வைத்துவிட்டார். இவைகளெல்லாம் அறவழியாக இருக்கவேண்டும் என்று ஒரு கட்டுப்பாடு செய்துவிட்டார். பொருள் நிலையானதல்ல; ஆகையால் பொருளைச் சம்பாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்ற தத்துவத்தை எடுத்துச் சொல்லவில்லை. அது வல்லாமல் பொருளின் பெருமையை எடுத்துச் சொல்லி இருக்கிறார்.

பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

ஒன்றுக்கும் மதிக்கத்தகாத ஒரு மனிதனைக்கூட 'இவனும்ஒரு மனிதன்' என்று மக்கள் நன்கு மதிக்க

வேண்டும் என்றால் அதற்குப் பொருள் ஒன்றுதான் இந்த வேலையைச்செய்யக்கூடும் என்று கூறுகிறார்.

> அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
> தீதின்றி வந்த பொருள்.

அங்கோ 'பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது இல்லை பொருள்' என்றார். அவ்வளவு பெருமையாகப் பேசிய பொருள் இருக்கிறதே; அது அறத்தின் வழியாக வந்த பொருளாக இருக்கவேண்டும். அதைப் பின்னும் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

> அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
> பிற்பயக்கும் நற்பா லவை.

மக்கள் யாவரும் கண்ணீர்விட்டு அழும்படியாக ஒருவன் பொருளைச் சம்பாதித்தால் அவனும் அழுதுகொண்டே அந்தப் பொருளை இழக்கவேண்டிவரும். ஆனால் நல்ல வழியில் சம்பாதித்த பொருளை ஒரு சமயத்தில் இழக்க வேண்டி நேரிட்டபோதிலுங்கூடப் பின்னுக்கு அது தகுந்த பயனைத் தரும். பொருட்பாலில் அந்தக் கட்டுப் பாட்டை வைத்துவிட்டார். 'அறத்தாற்றின் இல் வாழ்க்கை' என்பதாக எப்படி இல்வாழ்க்கையைச் சொன்னாரோ அதேமாதிரி. பொருளை - சம்பாதிக்கும் பொருளை எடுத்துக்கொள்ளுவோம். அது அறவழியாக வந்த பொருளாக இருக்கவேண்டும் என்று அஸ்திவாரம் போட்டுவிட்டு முதலில் அரசு என்பதைப் பற்றி ஆரம் பித்தார். மனிதனுடைய வாழ்க்கையைப் பற்றிப் பேசும்பொழுது எடுத்த உடனே ஏன் அரசனைப்பற்றிப் பேசவேண்டும்? அதற்கு நல்ல காரணம் உண்டு. உலகத்திலே மனிதன் எந்த சமயத்தில் நாகரிகத்தை அடைந்தான்; எந்த சமயத்தில் தன்னுடைய அறிவை அவன் அறிந்தான் என்று சரித்திரத்தைப் பார்க்கும் பொழுது நம் நாட்டில்மட்டும் அல்ல உலகத்தில் எல்லா இடத்திலுமே எந்த சமயத்தில் மக்கள் சமுதாயம் ஒன்று

ஓரிடத்தில்தங்கி ஒருமனிதனைத் தங்களுடைய தலைவன் என்று ஒரு சமுதாயம அமைத்தார்களோ அப்பொழுது தான் மனிதனுடைய நாகரிகம உதயமாகிறது. தலைவன் என்றால் சமுதாயம். தலைவனில்லாதது சமுதாயமல்ல. இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு தொல்காப்பியம் எழுதியவர், ஐந்துதிணைகளாக உலகத்தைப் பிரித்துப் பேசும்பொழுது ஒவ்வொரு இடத்தில் மக்களும உண்டு, மக்களுக்குத் தலைவனும் உண்டு என்கிறார். அந்தக கருத்தும் வெகுகாலமாக இருந்து கொண்டு வந்திருக்கின்றது தமிழ்நாட்டில். அதற்காகத் தான் திருவள்ளுவர் மக்களுடைய உலக வாழ்க்கையை எடுத்துப்பேச ஆரம்பித்தபோது சமுதாயத்திற்கு மிக இன்றியமையாத அரசனைப் பற்றி எடுத்துச்சொல்லி விட்டார். ஆனல், இப்பொழுதுதான் அரசன் என்பது இல்லையே இப்பொழுது குடியரசாட்சி ஆயிற்றே ஆகையினாலே திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் வகுத்த இலக்கணம இன்றைக்குப் பொருந்துமா? என்ற கேள்வி எழலாம; பொருந்தும. இது தான் வள்ளுவரின் விசேஷம. அரசனுக்குப் பதிலாகப் பிரைம் மினிஸ்டர், பிரசிடெண்ட் என்ற வார்த்தைகளைப்போட்டு விட்டாலும், ஒவ்வொரு குறட்பாவும் இந்தப் பிரைம் மினிஸ்டருக்கும, பிரசிடெண்டுக்கும பொருத்தமாகும். ஆனல அரசியல என்று அரசனைப் பற்றிப் பேசும் பொழுது - அந்தக காலத்தில் குடியரசு எது? மக்களுக்கு உரிமை ஏது? அரசன் எதேச்சையான ஒரு அதிகாரத்தைச் செலுத்தி வந்தவன்தானே என்று பார்க்கும் பொழுது குடியரசுக்கு முதல அஸ்திவாரம், அரசியல என்னும்படியான முதல் இயலில் அதிகாரத்தில் சொல்லி விட்டார். பிரசிடெண்டாக இருந்தபோதிலுங்கூட, பிரைமமினிஸ்டராக இருந்த போதிலுங்கூட, அரசன் என்று இருந்தபோதிலுங்கூட குடியரசின் அடிப்படையான தத்துவம என்ன? மக்களுக்கு அரசன் பிழை செய்தான் என்றால அதைப் பற்றித தைரியமாகப் பேசும்படியான உரிமைவேண்டும். டெமாக்கரசி, குடி

யரசு என்று சொல்லும்படியான ஆட்சிக்கு அடிப்படையான தத்துவம் அதுதான். அந்தத் தத்துவத்தின் உண்மையைத் திருவள்ளுவர் மறந்துவிடவேயில்லை. முதலிலே என்ன சொல்லுகிறார்?

> செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
> கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

செவியிலே நாராசம் காய்ச்சி ஊற்றும்படியான அப்பேர்ப்பட்ட - தன்னுடைய செவிகளெல்லாம் கஷ்டப்பட்டு வலியிழக்கும்படியான வார்த்தைகளையும் கேட்டுக்கொண்டு பொறுத்திருக்கும்படியான ஒரு அரசனின் குடையின் கீழேதான் உலகமெல்லாம் கட்டுப்படும் என்று சொன்னார். இந்த வார்த்தையின் பொருளை இன்றையதினம் நம்முடைய நாட்டிலிருக்கும் குடியரசு அரசாங்கம் இருக்கிறதே அதற்குப் பொருந்துமா? செவிகைப்பச் சொல்லைக் கேட்கக்கூடிய வேந்தர்களாகவா அவர்கள் இருக்கிறார்கள்? இல்லை. ஆகையால் அரசனைப்பற்றிச் சொல்லும்பொழுது குடியரசு என்னும்படியான அரசியல் தத்துவத்தின் அடிப்படையான உண்மையை எடுத்துப் பாடி விட்டார். இன்னும் அரசனுடைய கடமைகளைப் பற்றிப் பாடிக்கொண்டும் போகிறார்.

சாதாரணமாக மேல்நாட்டிலே அரசனைப்பற்றியும், அரசாங்கத்தைப்பற்றியும் என்ன கருத்து இருக்கின்றது என்றால் சென்ற எழுபது, எண்பது வருஷங்களாகத் தான் அரசாங்கத்திற்கு அந்தநாட்டுமக்களுடைய பொருளாதாரத்தில் சிரத்தை இருந்திருக்கவேண்டும். அதற்கு முன்னே அந்த சிரத்தை அரசாங்கத்திற்குக் கிடையாது. மக்கள் தனித்தனியாகத் தொழில் செய்யலாம்; கைத்தொழில் செய்துகொள்ளலாம்; வியாபாரம் செய்யலாம்; பொருளைச் சம்பாதிக்கலாம்; விவசாயம் செய்யலாம்; ஆனல், இந்தப் பொருளாதாரத் துறையிலே எல்லாம் அரசாங்கத்தார் தலையிடுவது சரியல்ல என்பதுதான்

அவர்களுடைய தத்துவம். நூறு வருஷங்களுக்கு முன் வரையில் மேல்நாட்டாரின் தத்துவம் அதுதான். நாம் தான் இருநூறு முன்னூறு வருஷங்களாக ஒரு தத்துவமு மில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறோம்.

மேல்நாட்டில் இப்பொழுது புதிதாக அவர்கள் கைப்பிடித்துவரும் தத்துவம் என்னஎன்றால் வரியை வசூலிக்கச் செய்து, போலீசை வைத்துக்கொண்டு திருடர்கள் வராமல் மக்களைக் காப்பது; வெளிநாட்டு அரசர்கள் தன் நாட்டில் கொள்ளை அடிக்காமல் பார்த் துக்கொள்வது; அதற்குப் பட்டாளம் வைப்பது; அது தான் அரசனுடைய கடமை. அரசாங்கத்தாரின் கடமை. பொருளாதாரம் பொறுத்தமட்டில் மக்கள் அவரவர்கள் இஷ்டம்போல் செய்துகொள்ள வேண்டியது. ஆனால் இந்த ஆண்டில் என்ன பெரிய உண்மை உணர்ந்து தெரிந்து கொண்டார்கள் என்றால் மக்களுடைய பொருளாதார நிலையைக் காப்பாற்றவேண்டிய ஒரு பெரிய கடமை அரசாங்கத்திற்கு உண்டு. அதற்காகத் தான் கண்ட்ரோல், இம்போர்ட்லைசன்ஸ், எக்ஸ்போர்ட் லைசன்ஸ். எந்த வியாபாரமாவது எந்தக் கைத்தொழி லாவது விவசாயமாவது அரசாங்கத்தின் உத்திரவில்லா மலும் அவர்களுடைய கட்டுப்பாடு இல்லாமலும் இப் போது நடத்த முடியாது. இது ஒரு பெரிய உண்மை என்று தெரிந்து கொண்டார்கள். வள்ளுவர் இந்தத் தத்துவத்தை 1800 வருஷங்களுக்கு முன்னே சொல்லி விட்டார். முதலில் அரசனுடைய குணத்தைப் பற்றிச் சொல்லி விட்டார் செவி கைப்பச் சொற்பொறுக்கும் மனதுள்ளவனாக இருக்கவேண்டும் என்று.

> இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்லது அரசு.

இந்த இரண்டு வரிகளிலே சோஷியலிஸ தத்துவம் பூராவும் அடங்கிவிட்டது. சோஷியலிஸம் வள்ளுவர்

ஏற்படுத்திய தத்துவம். அரசன்மேல் அந்தக் கடமையைப் போட்டார். என்ன கடமை? இயற்றலும் - பொருள் தேடும்படியான வழிகளை அரசன் தான் தேடவேண்டும். குடிகளின் பொறுப்பு அல்ல அது அரசனுடைய வேலை. ஈட்டலும் - பொருள் அபிவிருத்தியாகும்படியான வேலைகளை நேஷனலிசேஷன் என்று பேசுகிறார்களே, அந்த வேலையைச் செய்யவேண்டியதுதான் நம்முடைய வேலை. இது மட்டும் போதுமா? காத்தலும்- அப்படிச் சேர்க்கப்பட்ட பொருள்களை எல்லாம் காப்பாற்ற வேண்டிய கடமை அரசனுக்கு. இது எல்லாம் சாமானியம் தான். சோஷியலிஸம் கம்யூனிஸம் எல்லாம் கடைசி ஒரு வார்த்தையில் போட்டுவிட்டார். காத்த வகுத்தலும் வல்லதரசு – பொருள் தேடும்படியான வழிகளை மட்டும் கண்டுவிட்டால் போதாது; பொருள் உற்பத்தியை அதிகரித்தால் மட்டும் போதாது; அதைக் காப்பாற்றுவது மட்டும் போதாது; இந்தச் சேகரித்த பொருளைச் சரியாகப் பங்கீடு செய்து கொடுக்கவேண்டும் மக்களுக்கு. இது தான் சோஷியலிஸ தத்துவம். இதைவிட விசேஷமாக எதிலும் சொல்லமுடியாது. பொருளாதார நூல்களிலே உற்பத்தி, பங்கீடு, மக்கள் அநுபவிப்பது, (புரடக்ஷன், டிஸ்டிரிபியூஷன், கன்சம்ஷன்) என்று மூன்று பகுதிகளாகத்தான் செய்திருக்கிறார்கள். இந்தப் பங்கீடு என்னும்படியான அக்கடமையை உலகத்திலே இருக்கும்படியான அரசாங்கங்கள், அரசர்கள் இந்த அறுபது எழுபது வருஷங்களாகத்தான் அறிந்திருக்கின்றார்கள். அந்தப் பங்கீட்டின் பொறுப்பை முன்னே இருந்த அரசாங்கங்களும், மன்னர்களும் அறியாததால் தான் உலகத்திலே சோஷியலிஸம் என்னும்படியான தத்துவம் வந்தது. கம்யூனிஸம் என்னும்படியான தத்துவம் வந்தது.

காரல் மார்க்ஸ் என்னும்படியான ஒரு ஜெர்மன் நிபுணர் இந்தக் கம்யூனிஸத்திற்குக் கர்த்தா என்று சொல்லவேண்டும். அவர் அந்தப் புஸ்தகம் எழுதுவதற்கு

அடிப்படையான காரணம் என்ன? தன் கண் முன்னே பார்த்தார். உலகத்தில் கைத்தொழில் அபிவிருத்தி மூலமாகவும், விஞ்ஞான சாஸ்திரத்தின் உதவியைக் கொண்டும், ஏராளமான செல்வம் உற்பத்தியாகிக் கொண்டு வருகிறது. ஆனால், அதைச் சிறு கூட்டத்தார் தான் அநுபவிக்கின்றார்களே தவிர, பெரும்பாலான சாமானிய மக்கள் அநுபவிக்கவில்லை. அதாவது ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பொருளைச் சரியாகப் பங்கீடு செய்து மக்களுக்குக் கொடுக்கவில்லை. அந்த ரோஷம் தான் கம்யூனிஸம் என்னும்படியான தத்துவத்தை எழுதும்படியான மனப்பான்மையை அவருக்கு ஏற்படுத்தியது.

இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

என்னும்படியான இந்த ஒரு குறளின் பொருளை நாம் தெரிந்து கொண்டோமேயானால் பொருளாதாரத்துறையில் இருக்கும்படியான சகல தத்துவங்களையும் அறிந்து கொண்டோம்; சகல கடமைகளையும் தெரிந்துகொண்டோம் என்னலாம். இவ்வளவு சுலபமாகப் பொருளாதார சாஸ்திரம் திருக்குறளில் இருந்தவினாலேதான் சுவாமிகள் என்னை நீண்டதோர் பிரசங்கம் செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள்.

திருவள்ளுவர் பொருளாதாரத்தின் உண்மையை எடுத்துச்சொல்லிவிட்டார். இன்னும் சில சாமானியமாக வர்த்தகம் அல்லது ஒரு கைத்தொழில் செய்பவன் அல்லது ஒரு செல்வன பொருளாதாரத்துறையில் அவனுடைய மனப்பான்மை எப்படி இருக்கவேண்டும் என்பதற்கும் சொல்லுகின்றார்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

பங்கீடு செய்தாயிற்று. நம் பாகம் கைக்கு வந்தா யிற்று. பின் எப்படி அதை உபயோகிப்பது? 'அள வறிந்து வாழாதான் வாழ்க்கை'-நம்முடைய வருவாய் என்ன என்று தெரிந்துகொண்டு, அதற்கு ஏற்ற வண்ணம் நாம் செலவு செய்ய வேண்டும்; அப்படி வருவாயை அறிந்து செலவு செய்யாமல் அதனுடைய அளவை மீறிச் செலவுசெய்யும் மனிதனுடைய பொரு ளாகப் பட்டது, பொருள் இருக்கிற மாதிரி தோன்றும். ஆனல், வெகு சீக்கிரம் அது மறைந்துவிடும் என்று சொன்னர். அந்தக் கருத்து, தனிப்பட்ட மக்கட்கு மட்டும் அல்ல; இது அரசாங்கத்திற்கு ஒரு கடமை. இப்போ நம்முடைய நாட்டில்மாத்திரம் அல்ல; இன் னும் மற்ற மேல்நாடுகளிலும பொருளாதாரக்குழப்பமும் நெருக்கடியும் ஏற்படுகின்றன. ஏன்? அரசாங்கத்தார் தங்களுடைய வருவாயை நினைத்து அளவிட்டுச் செலவு செய்யவேண்டும். 'இப்பொழுது அப்படியில்லை; வரு வாய்க்கும செலவுக்கும் சமபந்தமே கிடையாது. ஏன் ஏராளமாகப் பணம் வரும்பொழுது ஏராளமாகச் செலவு செய்தால் என்ன? அளவு அறிந்து என்று சொல்லும் பொழுது தங்களுடைய வருவாயை அறிந்து, அது ஒரு ஏழைக்கு மட்டுமல்ல. ஒரு சிறிய பணக்காரனுக்கு மட்டுமல்ல. ஒரு மனிதனுக்கு ஒருகோடி ரூபாய் வருஷத் திற்கு வரும்படி வருகிறதென்றல் அவனுங்கூட அந்த அளவை அறிநது செலவுசெய்யவேண்டும். இப்பொழுது நம்முடைய அரசாங்கத்தார் அப்படிச் செய்து வருகிருர் களா? இல்லை. அளவறிந்து செலவு செய்யவேண்டும. மேல்நாட்டில்கூடப் பொருளாதார நெருக்கடிக்கும, குழப்பத்திற்கும் காரணம அப்படிச் செய்யாததே. அதே கருத்தைத்தான் அதாவது பெரிய கோடீஸ்வரன் கூட அளவறிந்து செலவு செய்யும்படியான கருத்தை ஒருசமயத்திலே கம்பர் சொல்லுகிருர்.

தசரதன் எப்படி தன்னுடைய நாட்டை ஆண்டான் என்று சொல்லிக்கொண்டு வரும்பொழுது ஒரு பாட்டு; அதில் கடைசிவரியை மாத்திரம சொலலுகிறேன்.

வையக முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய்யெனக் காத்தினிது அரசு செய்கின்றான்.

என்று தசரதன் ஆட்சிக்கு உபமானத்தைச் சொன்னர். யாரை? இன்னொரு சக்கிரவர்த்தியையா? கோடீஸ்வரனைச் சொன்னரா? சக்கிரவர்த்தியைச் சொல்ல வில்லை. கோடீஸ்வரனைச் சொல்லவில்லை. வறிஞனை - தரித்திரத்தில் மூழ்கியிருக்கும்படியான ஒரு மனிதனைச் சொன்னர். அந்தத் தரித்திரத்தில் மூழ்கிக்கிடக்கும் அவனுக்குப்பிள்ளைகள் நான்கு, பெண்ஜாதி, அவனுக்கு இருப்பதோ மூன்று ஏககரா வயல்தான். அதைத்தவிர வேறு வரும்படி அவனுக்குக் கிடையாது. அப்பேர்ப் பட்ட ஒரு வறிஞன் அந்தநிலைமையிலே அந்த மூன்று ஏக்கரா வயலிலே காலணு அதிகம் செலவு ஆகாமலும் ஒரு பருக்கை நெல்லைக்கூட சேதமாக்காமலும் எப்படிக் காப்பாற்றுவானே அந்த விதமாகத் தசரதன் தன்னு டைய நாட்டைக காப்பாற்றினன் என்று சொல்லு கிறார். சக்கிரவர்த்தி தன்னுடைய நாட்டைக் காக்கும் பொழுது-தன்னுடைய ஏராளமான செல்வத்தைச் செல வழிக்கும்பொழுது 'வறிஞன் ஓம்பும் ஓர் செய்யெனக் காத்து இனிது அரசு செய்கின்றான்' என்றார். இது ஒரு பெரிய உண்மை. இது முக்கியமாக நம்முடைய அரசாங் கத்தார் அறியவேண்டும. அதாவது எவ்வளவு பணம் இருந்தாலும் அளவு அறிந்து அந்தப் பணத்தைச் செலவுசெய்யவேண்டும் அளவு அறிந்து செலவுசெய்ய வேண்டியது என்னும்படியான கடமையை அரசாங்கத் தார் மட்டும் அல்ல; தனிப்பட்ட மக்களும் அறிய வேண்டியது அவசியம். இதை எல்லாம் சொல்லிவிட்டுக் கடைசியாகப் பொருள் இருப்பதுவாஸ்தவந்தான். ஆனல் பொருள் இருந்தும் அதை முதலிலே அளவு அறிந்து செலவு செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டார். அளவு அறிந்து செலவு செய் என்றால் அதற்காக ஒரு மனிதன் லோபியாக இருந்தாலும் பிரயோஜனமில்லை என்பதற்கு,

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்.

என்கிறார். பணத்தை மிகச சம்பாதிததாகிவிட்டது; நீ போடுகின்ற அளவிலே செலவாகவில்லை; எல்லாம் பெட்டிக்குள் இருக்கின்றது. அந்தப் பணம இருநதால் உயிர் இருந்தும் உயிர் இல்லாதவனாகக் கருதப்படுவான். அந்தப் பணத்தைக்கொண்டு எந்தவிதமான செலவும் செய்யாமல லோபியாக இருககின்றவன் இருககின்றானே அவன் உயிர் இருந்தும் உயிர் இல்லாதவனாகவே கருதப் படுவான் என்கிறார். பொருளாதாரத் தத்துவத்தைப் பற்றி இதைவிட வேறு என்ன சொல்லவேண்டும். பொருளாதார சாஸ்திரம் எல்லாம் சில பாட்டுககளில் திருக்குறளில் அடங்கிவிட்டது. ஆகையால்தான் இந்தப் பொருட்பாலாகப்பட்டது திருக்குறளின் உயிர்நிலை என்ப தாக நான் முன் சொன்னேன். இந்தப் பொருட்பாலைப் படிக்கும்பொழுதுதான் திருவள்ளுவர் எப்படி தன் னுடைய அறிவினால் உலகில் எந்நாளும் எல்லோரும் நினைககும்படியான உண்மையை எடுத்துச்சொன்னார் என்பது தெரியும்.

இதில்சொல்லிய அறம், பொருள், இன்பம் என்னும் படியான மூன்று துறைகளைப் பார்ககும்பொழுது அறம் இன்பம் இவை இரண்டும எந்நாளும் மாறாதவைகள். அறத்தைப் பொறுத்தமட்டில இரண்டாயிரம வருஷங் களுக்கு முன் அறத்திற்கு என்ன பொருள் சொல்லப் பட்டதோ அந்தப் பொருள் இன்றும் மாறுபடவில்லை. அதேமாதிரிதான் மனிதனுடைய இன்பம் என்று சொல்லும் பொழுது இன்றைககு என்ன என்ன விஷயங்கள் நமககு இன்பத்தைக் கொடுக்கிறதோ அதே விஷயஙகள்தான் அன்றைககும் இன்பத்தைக கொடுத் தன. ஐயாயிரம் வருஷங்களுககு முன் மனிதன் எதை இன்பம் என்று கொண்டானோ அதுதான் இன்றைக் கும் இருக்கிறது. அன்றைககு எது இன்பத்தைக்

கொடுத்ததோ? அதுதான் இன்றைக்கும் இன்பத்தைக் கொடுக்கின்றது. ஆகையால் அறத்துப் பாலினும், இன்பத்துப் பாலினும் என்றும் மாறாத உண்மையைக் கையாண்டது ஒரு பெரிய ஆச்சரியம் அல்ல. பொருள் என்னும்படியான விஷயத்தை எடுத்துப் பார்க்கும் பொழுது அதில்தான் உலகத்திலே ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும், ஒரு காலத்திற்கும் மற்றொரு காலத்திற்கும் வித்தியாசம் வரும். அப்பேர்ப்பட்ட மாறுபாடு அடைந்த பொருள் என்னும் செய்தியைக் கையாளும்போது வள்ளுவர் எல்லாக் காலத்திற்கும் சரியாக-பொருத்தமாக-நிலைக்கும்படியாக மாறாதிருக்கும் உண்மைகளை உண்டாக்கிவிட்டார். இந்த விதமாகத் திருக்குறளைப் பற்றிப் பேசவேண்டுமென்றால் பேசிக் கொண்டே போகலாம். ஆனால் எனக்குப்பின் நண்பர் சேதுப்பிள்ளை அவர்கள் பேச இருக்கிறார்கள். ஆகையால் நான் என்னுடைய சொற்பொழிவை இத்துடன் நிறுத்திக்கொண்டு நண்பர் சேதுப்பிள்ளை அவர்களைப் பேசுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள் உரைவளம்

அறத்துப்பால்

உரைப்பகுதி, உரைவிளக்கப்பகுதி, மேற்கோள் பகுதி, ஒப்புமைப்பகுதி என்ற நான்கு தலைப்பில் உரைவளம் அமைந்துள்ளது. கிரவுன்சைஸ் (1x4) 584 பக்கங்கள். விலை தபாற்கூலியுள்பட ரூ. 7—0—0.

K. பாலநாதன்,
செயலாளர்,
'ஞானசம்பந்தம்' காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

தருமபுர ஆதீன மடாலயத்தில்
திருக்குறள் பொருட்பால் உரைவள வெளியீட்டு விழாவில்

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர்,
'சொல்லின் செல்வன்', உயர்திருவாளர்

ரா. பி. சேதுப்பிள்ளை B.A., B.L. அவர்கள்

ஆற்றிய பேருரை.

அன்பர்களே!

அருள் சிறந்த மகாசந்நிதானத்தின் திருவடிகளுக்கும், அரும்பெருமை வாய்ந்த தலைவர் அவர்களுக்கும், அன்பார்ந்த பெரியோர்களுக்கும் என்னுடைய தாழ்மையான வணக்கம். இன்று ஆவணிமூலத்திருநாள். அதன் சிறப்பைத் தேசிகர் அவர்கள் சொல்லக் கேட்டீர்கள். ஆவணிமூலத்திற்கும் நமது ஆண்டவனுக்கும் இருக்கின்ற அருமையான தொடர்பை அவர்கள் மிக விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். அத்தகைய இந்த நாளில் அடியேன் பெற்றபேறு என்றும் என்னால் மறக்க முடியாது. திரு. சண்முகஞ் செட்டியார் அவர்கள் நம்முடைய தமிழ்நாட்டுக்குத் தனிப்பெருந் தலைவர். அவர்களுடைய சேவையைப் பெறுவதற்குப் பாக்கியமில்லாத நாடுகள் எப்படியேனும் செல்லட்டும். நம்முடைய கொங்குநாட்டுச் செல்வர், சிலப்பதிகாரத்திலே சொல்லப்பட்டபடி ஒரு பெரும் தனி நாயகமாக விளங்குகின்றார்கள். அவர்களுடைய அறிவின் திறந்தைக்கண்டு அழுக்காறுகொள்வார் சிலர். ஆயினும் ஆண்டவன் அறிவான் யாவற்றையும். என்றும் நமக்கு நன்மை செய்யுமாறு அவர்களுக்கு ஒரு வாய்ப்பினை அளிப்பான் என்று மகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளிலே நான் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன். அவர்கள் தமிழுக்கு இப்பொழுது சேவை செய்யத் தொடங்கியது நம் தாய்மொழிசெய்த ஒரு தவம் என்றுதான் சொல்லவேண்டும். பொருளாதாரத் துறையிலே அவர்கள் உலகு அறிந்த

பெரியாராக விளங்குகின்றார்கள். இன்று, செந்தமிழ் நாடு அவரைச் சிலப்பதிகாரம் கற்ற வித்தகர் என்று அறியும். திருக்குறளைப் போற்றுகின்ற தெள்ளிய அறிஞர் என்று தெரியும். இன்னும் எத்தனை எத்தனை நூல்களை அவர்கள் நமக்கு வழங்க இருக்கின்றார்களோ. எல்லாம் இறைவன் திருவருள்.

திருக்குறளை அவர்கள் எடுத்துப் பேசும்பொழுது கம்பரின் காவியத்திலிருந்து ஒரு மேற்கோள் காட்டிய முறையை நான் சிந்தித்தேன். இனி அடுத்து இந்தப் பெருங்காவியத்தில்தான் கருத்துக்களைக் காட்டுவார்கள் என்று எண்ணுகிறேன். அரும் பெரும் தமிழ்ச்செல்வங்களை எல்லாம் அள்ளிவழங்குகின்ற வள்ளலாக விளங்குகின்றார்கள் நமது திரு சண்முகனார் அவர்கள். அவர்களைத் தலைமையாகக் கொண்டது இந்த அரும் பெரும் சபை. மகாசந்நிதானம் அடியேனைப் பற்றிச் சொல்லிய சில கருத்துக்களை நினைக்கின்றபொழுது எனது உள்ளம் மகிழ்ச்சி அடைகின்றது. இந்த மடத்தை நினைக்கும்பொழுதெல்லாம் ஆலவாயண்ணல் நினைவு வரும். ஆலவாயண்ணல் மதுரையில் அமர்ந்து செந்தமிழின் சுவையை மூந்தி அருந்தினரல்லவா? இது தமிழ் மக்களுடைய உள்ளத்தைவிட்டு ஒரு நாளும் அகலாது. அந்த முறையிலே பல தெள்ளிய அறிஞர்களையும் சான்றோர்களையும் தந்தது இந்த மடம். தமிழ் நாட்டிலிருந்து வடநாட்டிற்குச் சென்று பெரிய மன்னர்களை அடக்கிச் சைவமடம் நிறுவிய பெரியார் - தமிழ்நாட்டில் தோன்றிய சான்றோர் அவர் இந்த மடத்தைச் சார்ந்தவர் என்பதை அறிகின்றபொழுது எந்தத்தமிழனுடைய உள்ளந்தான் களிப்படையாது. குமரகுருபரசுவாமிகள் என்று சொல்லும்பொழுது இன்று வடநாட்டாரும் உணர்ந்து, போற்றி, வணங்குகின்ற பெரும் சீலம் நமக்குத் தோன்றுகிறது. அவர்கள் தோற்றுவித்த திருப்பனந்தாள்மடம் இன்றும் தமிழுக்கும் சைவத்திற்கும் சிறந்த சேவையைச் செய்துவருவது ஒருபெருமை.

தமிழ்த் தலைவர் நிறுவிய ஒருமடம் - அவருடைய பொருளால் நிறுவப்பட்ட ஒரு மடம் - தருமை ஆதீனத்திலிருந்து ஞானம்பெற்ற ஒரு செல்வரால் நிறுவப்பெற்ற ஒருதிருமடம் சைவத்தையும் தமிழையும் ஆதரிக்கிறது இப்பொழுது என்பதில் என்ன தடை இருக்கிறது.

இன்று மகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கின்ற நமது சுவாமிகள் சிவனடியிலும் செந்தமிழிலும் மிக ஈடுபாடுடையவர்கள். சில ஆண்டுகளாகத்தான் அடியேனுக்கு அவர்களை நேரில்தரிசிக்கும் பேறு கிடைத்தது. ஆயினும், இந்தச் சில மாதங்களுக்குள்ளே, அவர்களுடைய சீலத்தையும், செந்தமிழைப் போற்றுகின்ற சிறப்பினையும் அடியேன் நன்ருக அறிந்துகொண்டேன். இந்த மடத்தை நம்முடைய தமிழ்நாடு ஒரு சிறந்த தமிழ் நிலையமாகக் கருதவேண்டும் என்பது என்னுடைய ஆசை. அதற்குச் சந்நிதானத்தின் திருவருள் இருக்கிறது என்று எனக்கு நன்ருகத் தெரியும். இந்தத் திருமடம் வேறு, தமிழ்நாடு வேறு என்று எண்ணலாகாது. அப்படிச் சிலகாலம் எண்ணியிருந்ததினல்தான் நமக்கும் திருமடத்திற்கும் இருந்த தொடர்பு சிறிது நெகிழ்ந்துவிட்டதோ என்று நான் எண்ணுகிறேன். இது நம்முடைய மடம், நம்முடைய இடம், நம்முடைய தாயகம் என்று நம்முடைய உள்ளத்தில் தோன்றவேண்டும். எப்பொழுது இங்கே தமிழ்விழா நடைபெறுகிறதோ, எப்பொழுது சந்நிதானம் வரும்படியாகப் பணிக்கின்றதோ அப்பொழுது தமிழ்மக்கள் எல்லோரும் வந்து கலந்துகொள்ளும் உரிமையும் கடமையும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். அப்படியிருந்தால் சந்நிதானம் அவர்கள் பல நற்காரியங்களைச் செய்வார்கள்; இன்னும் புலவர்களைப் போற்றுவார்கள். இன்று அடியேனுக்கு அவர்கள் செய்த சிறப்பு, தமிழ்த்தாய்க்குச் செய்த ஒரு சிறப்பாக நான் எண்ணுகின்றேனேயன்றி, எனக்குத் தனிப்பட்ட நிலையிலே செய்த சிறப்பாக எண்ண என்னுடைய உள்ளம் இடம் தரவில்லை. என்னுடைய

எண்ணம் தமிழ்த்தாய்க்கு இடையறாது தமிழ்த்தொண்டு செய்யவேண்டும் என்பதே.

எனக்குத் தமிழ்த்தொண்டு செய்யவேண்டும் என்ற ஆசை இளமையிலேயே ஆண்டவன் திருவருளாலும், பெரியோர்களின் ஆசியினாலும் எனக்குவந்தது. அந்தத் தொண்டினைச் செய்து வருகிறேன். அதை மகாசந்நிதானம போன்ற அருளுடைய சான்றோர்கள் போற்றுவது - பாராட்டுவது, தலைவரவர்கள் சொல்லியதுபோல எனக்கு ஊக்கம அளிக்கும்பொருட்டு என்மூலமாக, இங்கே வீற்றிருக்கின்ற இளம் தமிழ்மாணவர்களுக்கு ஊக்கம அளிக்கும் என்று தான் எண்ணுகிறேன். யான் பெற்ற இச் செல்வம - யான்பெற்ற பொன்னுடை இந்த உலகம் பெறட்டும். நமக்குச் சொந்தமாகிய பிறமடங்களிலும் பெறவேண்டும் அதற்கு எல்லாம வல்ல ஆண்டவன் அருள் தரவேண்டும்.

அன்பர்களே! இன்று திருக்குறள் பொருட்பால் உரைவளம் இங்கே அரங்கேறியது. தலைவரவர்கள் சொல்லியபடி சென்ற ஆண்டில் அறத்துப்பாலின் உரைவளத்தைத் தமிழ்நாடு மனமாரப் புகழ்ந்தது; வாயார வாழ்த்திற்று. நம் மகாசந்நிதானம் அவர்கள் சென்ற ஆண்டிலே அறத்துப்பாலோடு நிறுத்திவிடுவதாகத்தான் எண்ணியிருந்ததாக அடியேன் அறிந்தேன். அறம் ஒன்றேபோதும். அறம் தலையெடுத்தால் பொருள் தானே வளரும; இன்பமும் தானே எய்தும் என்று கருதியதாக அடியேன் உணர்ந்தேன். அந்த உரைவளம் வெளிவந்தபின்னர் அறிஞர்கள் எல்லாம பாராட்டினர்கள். இத்தகைய வெளியீடுகள் ஆண்டுக்கு ஒன்று அல்ல, இரண்டு மூன்று வெளிவர வேண்டும என்று மகாசந்நிதானத்தை வேண்டிக கொண்டார்கள். அந்த வகையிலே ஊக்கமும் ஆர்வமும் மகாசந்நிதானத்தின் உள்ளத்தில் தோன்றிற்று. அறததைத் தொடர்ந்து பொருளையும் முடித்துவிடவேண்டும்; பொருளையும்

நம்முடைய நாட்டார்க்கு வழங்கவேண்டும் என்று திருவுளம் கொண்டார்கள். அதன்பயனாகவே இன்று தலைவரவர்கள்முன்னே இருக்கின்றதான ஒரு சிறந்த பொருள் நூலைப் பார்க்கின்றீர்கள். இதை, இன்னும் சில நாட்களிலே உங்களுடைய கையில் இருக்கும்படியாக நீங்கள் செய்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எந்த நூல்நிலயத்திற்கும் இது ஒரு அணிகலன் என்று சொல்வது மிகையாகாது; எவ்வளவு சிறந்த - சிறியநூல் திருக்குறள் ஒன்று இருக்கிறது என்று இதுவரை நாம் சொல்லிமகிழ்ந்தோமோ அந்த ஒன்றுக்கு உரையாக இப்பொழுது எவ்வளவுபெரிய நூல்கள் இருக்கின்றன என்பதை உலகத்தார்க்குக் காட்டும் வாய்ப்பை மகாசந்நிதானம்அவர்கள் அளித்தார்கள். அதற்குத் தமிழர்கள் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். இது மட்டுமா; இன்னும் இன்பப்பாலும் வரும் என்று தோன்றுகிறது. அறத்தையும், பொருளையும் நமக்குத் தந்த சந்நிதானம் இன்பத்தையும் தருவதற்குச் சிறிதுகூடப் பின்வாங்க மாட்டார்கள்என்பது நமக்கு நன்றாகத்தெரியும்; எனவே இன்பமும் எய்துவோம். அறமும், பொருளும் பெற்ற நாம் இன்பமும்பெறுவோம் என்றஉணர்ச்சியோடு இந்த மடத்திலே இருக்கிறோம். அடுத்த ஆண்டு ஆவணி மூலத் திருநாளிலோ அல்லது வேறு ஒருநாளிலோ அந்த இன்பப்பாலை எய்தப் பெறுவோம். இப்படிப்பட்ட சிறந்த சேவைசெய்து வருகின்ற நம்மகாசந்நிதானம் நீடூழி வாழ்க என்று தமிழ்த்தாயின் திருவடிகளைப் போற்றுகின்றேன்.

அன்பர்களே! இன்று திருக்குறள் பொருட்பால் வெளியிடும் நாள் ஆதலால் ஏதேனும் திருக்குறளைப் பற்றிப் பேசவேண்டும் என்று அன்பர்கள் பணித்தார்கள். அந்த வகையிலே நல்லரசு என்ற ஒரு பொருளை அவர்களுக்குக் குறித்து அனுப்பினேன். நமது தலைவர் அவர்கள் கூறியவாறு பொருளைப்பற்றித்

திருக்குறள் கூறுவனவெல்லாம் அரசாங்கத்திற்குப் பொருந்தும். எந்த அரசாயினும், அது முடியரசாயினும், குடியரசாயினும, அரசுகளுக்குச்சொல்லப்பட்ட உண்மைகள் எக்காலத்திற்கும் பொருந்தும்என்பது அறிந்தோருடைய முடிபு. அவர்கள் எடுத்த முறையிலே ஒரு கருத்தை விளக்கிவிட்டு நான் விடைபெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

அடிப்படையான கருத்துக்கள் எக்காலத்துக்கும், பொதுவான கருத்துககள் - எந்நாட்டவரும் ஏற்றுக் கொள்ளும்படியான கருத்துககள் திருக்குறளில் உண்டு என்பதைப் பலகாலும பல்லோரும் சொல்லககேட்டிருக் கிறோம. அதற்கு ஒரு சான்று அவர்கள் காட்டிய வழி யில் நின்று நான் பேசுவேனுகக. அரசன் எப்படிப் பட்டவனுக இருககவேண்டும்? அல்லது அரசாள்வோர் எப்படிப் பட்டவர்களாக இருககவேண்டும் என்று சொல்லவந்த திருவள்ளுவர், 'செவி கைப்பச் சொல் பொறுக்கும் பண்பு' வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறினுர். செவிகைப்ப ஒருவர் சொல்லுகிறசொல்லையும் அறிந்து பெருமையோடு கேட்டு உண்மை யிருந்தால் ஏற்றுக்கொள்ளுகிற மனப்பான்மை எந்தஅரசு அல்லது அரசாங்கத்தினிடம் இல்லையோ அந்த அரசு அல்லது அரசாங்கம நிலைத்து நிற்கமுடியாது என்பது திரு வள்ளுவரின் அடிப்படையான தத்துவம். எந்த அரசு செவிகைப்பச் சொற்பொறுககும் பண்பு வாய்ந்ததோ அந்த அரசு நீடூழி வாழும். ஆனுல், அதை இழந்ததோ, அற்றதோ, அது அழிந்து ஒழிந்து விடும். இதைவிடச் சிறந்த கருத்து இந்த உலகத்திற்கு எந்த அறிஞுல் சொல்லமுடியும்? செவிகைப்பச் சொற்பொறுககும் இந்தபண்பினைப் பலவாருக எடுத்துக காட்டுகிருர்கள். அமைச்சர்களை எடுத்துக் கூறுகின்ருர் திருவளளுவர். அமைச்சர்கள் நம்முடைய நாட்டிலும இப்பொழுது இருககிருர்களல்லவா? அமைச்சியல திருககுறளிலே இருக்கிற முறையை நன்ருக அறிந்துவிட்டு நாம்

இப்பொழுது காண்கின்ற அமைச்சியலை சீர்தூக்கிப் பார்த்தால் நம்முடைய திருவள்ளுவர் காலத்திலிருந்து வழிவழியாக வந்த அரசியல் எவ்வளவு தூரம் நம்மை யெல்லாம் ஏமாற்றம அடையச்செய்துவிட்டது என்பது நன்ருகத் தெரியும். கூறுகின்ருர் அமைச்சர்களைப் பற்றி. அமைச்சர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்? அரசனுக்கு அறிவுரை கூறுகின்ற அமைச்சர்களாக இருக்கவேண்டும். குடிகளுக்கு நல்லனவே கூறுகிற - நாட்டுக்கு இதம் தருகிற கருத்துக்களைச் சொல்லுகின்ற அமைச்சர்களாக இருககவேண்டும். அரசன் தகாத வழியில் செல்லுகிறபொழுது, அவனை இடித்துச்சொல்லுகிற அமைச்சர்கள் எந்த நாட்டில் இருக்கின்ருர்களோ அந்த நாடுதான் நன்கு வாழும். இடித்துச் சொல்லுகிற அமைச்சர்கள் இல்லாத நாடு, தானே வீழ்ந்து, அழிந்து ஒழியும என்ற அரசியல் கருத்து அமைச்சியலில் சொல்லப்பட்டிருக்கிறது.

> "இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
> கெடுக்கும் தகைமையவர்"

என்று உடன்பாட்டு வகையான் கூறினர். இடிக்குந் துணையார் என்ருல் செவிகைப்பச் சொல்லும் தன்மை உடையவர்கள். சொல்லுகிற சொற்கள் அரசனுடைய செவியை உறுத்தினுலும், வருத்தினுலும் அஞ்சாமல் உண்மையைச் சொல்லுவது தன்னுடைய கடமை என்று அறிந்து கூறுகிற அமைச்சர்கள் எந்த நாட்டில் இருககிருர்களோ, அந்த நாடுதான் வாழும். இடிக்குந் துணையாரை யாள்வாரை - அவர்களை அமைச்சர்களாக வைத்துக்கொண்டு நாட்டை ஆளுகின்ற அரசர்களை, யாரே கெடுக்கும தகைமையவர்? அந்த அரசியல் ஒரு நாளும் கெடாது. ஏனென்ருல் இடிக்குந் துணையார் சொல்லுகின்ற சொற்களை நன்ருக மனதிலே அறிந்து செவிகொடுத்துக் கொள்ளுகின்ற அநத அரசன் நீடுழி வாழ்வான். அந்த அரசு நீடுழி வாழும். வேருெரு வகையானும் இந்தக்கருத்தைச் சொல்லுகிருர்:

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்''.

இடித்துச் சொல்லுகிற - எடுத்துச் சொல்லுகிற அமைச்சர்களைத் துணைகொள்ளாத அரசு புறப்பகையால் அழியா விட்டாலும், அகப்பகையால் அழிந்தொழியும் என்பது கருத்து. வேறு பகைவர்களாலே கேடு அடையாவிட்டாலும அகப்பகையாலே அழிவான் என்பது கருத்து. இந்த இரண்டையும இணைத்துப்பார்ககவேண்டும் என்று கேட்டுக்கொளளகிறேன. அரசனின் செவி கைப்ப இடித்துச் சொல்லுகிற அந்தக கருத்தை எந்த அரசு கேட்கின்றதோ அந்த அரசுதான் அரசு என்ற பெயருக்கு உரியது. தாம் கொணடதே கோலம் கண்டதே காட்சி என்றிருககின்ற அரசியல் புறப்பகையிலலா விட்டாலும் நெடுங்காலம வாழமுடியாது இநத அரசியல் உண்மையை நம் பாரத நாடு அறிந்துகொள்ள வேண்டும். பிற நாடுகளும் அறிந்துகொள்ளவேண்டும் என்பது என்னுடைய ஆசை. பிற நாடுகளுக்கு அந்த உண்மையை உணர்த்துகின்ற கடமை நமது தலைவர் அவர்களுக்கு உண்டு. திருககுறளை, மறைவாக நம்மிடத்திலே பேசுவது பெருமை அலல என்று பாரதியார் சொல்லிய முறையிலே வெளிநாட்டாருக்கும் வழங்கிப் பேசவேண்டும். மாறுத உண்மைகளைககண்டு அவர்கள் மகிழவேண்டும். அத்தகைய சேவை காத்திருககிறது நமது தலைவர் அவர்களுககு. நம்முடைய நாட்டுச் செல்வத்தைப் பிறநாட்டாருக்கும் காட்டி அவர்களுககும் விளங்குமபடியாகச் செய்கின்ற திறமை சிலருககே உண்டு. அத்தகையாளருள் சிறந்தவர் நமமுடைய தலைவராக இருககின்ற பெரியார் அவர்கள். நாம் சொல்லுவதைச் சொலலிவிடுவோம. அது விளைகின்ற காலத்தில் விளையட்டும்; நாம அறுவடை செய்கின்ற காலத்தில் செய்துகொளளலாம் என்ற கருத்தோடு சொன்னேன். ஆகவே 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்' என்ற இந்தக் குறளின்

கருத்தைக் கம்பர் எவ்வளவு ஆதரித்துப் போற்றுகிறார் என்பதைப் பாருங்கள்.

இலங்கையிலே ஒரு அரசு இருந்தது. அது வல்லரசு. அயோத்தியிலே ஒரு அரசு இருந்தது. அது நல்லரசு. இந்த வல்லரசுகளும், நல்லரசுகளும் எப்பொழுதுமே காவியங்களில வேற்றுமை செய்யப்படும். கந்த புராணத் தின கருத்தும அதுதான். சூரனுடைய அரசு வல்லரசு. முருகனுடைய அரசு நல்லரசு. நல்லரசுக்கும் வல்லர சுககும ஏறபடுகினற பிணக்கத்திலே - போரிலே வல் லரசு எவ்வளவு வனலமையுடையதாக இருந்தாலும் அழி யும்; தோறகும. நல்லரசு வெல்லும. இதுதான் காவியங் களின் கருத்து. இந்தககருத்தைத் திருக்குறளையொட்டிக் கமபர் நமககு அறிவிககின்ற முறையைக காண்பது இன்பம் பயககும. இலங்கையரசனின் தன்மையைக காட்டுகிறார் கமபர். அசோகவனத்திலிருந்து சீதை அரககர் கோமானிடத்திலே சொல்லுகிறாள். அவனோ அடாதமொழிகளைப் பேசுகின்றான். சொல்லுகின்றாள் சீதை:-

> "கடிக்கும் வல்லரவும் கேட்கும் மநதிரம் களிக்கின்றோயை
> அடுக்கும்ஈது அடாது எனறு ஆனற எதுவோடு அறிவுகாட்டி
> இடிக்குநர் இல்லை உள்ளார் எண்ணியது எண்ணி உன்னை
> முடிக்குநா என்றபோது முடிவன்றி முடிவது உண்டோ"

ஆணித்தரமான ஒரு அருமையான அரசியற் பொருள் அடங்கிய ஒரு பாட்டு இது. திருககுறள இங்கே பொதிந்து இருககிறது எனறு அந்த ஒரு சொல்காட்டுகிறது. அந்த சொல்தான் இடிககும என்பது. இந்த இடித்தல் என்ற ஒலி நமமுடைய செவியில் இடித்துககொண்டிருக்கும். ஆனால், இந்தக் கம்பருடைய பாட்டிலே இடி என்ற அந்த சொலலை நாம் கேட்கலாம இலககிய மாணவர் களுககு நன்றாகத்தெரியும். கடிககும் வலலரவும் கேட்கும் மந்திரம; நல்ல பாமபு என்று சொல்லககூடிய கொடிய பாமபும மந்திரத்திறகு அடங்கியே நிற்கும். மந்திர

ஆணைக்குக் கட்டுப்படும். மந்திரம் என்பது ஆலோசனை. மந்திரம் மந்திரிகள்; மந்திரம் சொல்லுகின்றவர்கள் - போடுகின்றவர்கள்தான் மந்திரிகள். ஆதலால் கடிக்கும் வல்லரவும் கேட்குமே மந்திரம்! ஆனால், நீ நல்ல மந்திரத்தைக்கூட உன்னுடைய செவிகளிலே போடுகின்றாய் இல்லையே! என்று முறையிடுகின்றாள் சீதை. உன்னுடைய நாட்டிலே நல்ல அமைச்சர்கள இல்லையோ? மந்திரிமார்கள் இல்லையோ? என்றால் இருக்கின்றார்கள். உன்னுடைய நாட்டிலும் அமைச்சர்கள் இருக்கின்றார்கள்; ஆனால், நீ எண்ணியதையே அவர்களும் எண்ணுகிறார்கள். நீ என்ன எண்ணுகின்றாயோ அதையே அவர்களும் சொல்லுகின்றார்கள். இப்படிப்பட்ட அரசியல் அழியாமல் நிலைத்து நிற்கும் என்று எண்ணுகிறாயா? என்பதாக அரக்கர்கோமானிடத்திலே கற்பின் பெருமையினாலே பேசுகின்றாள் சீதை. களித்தல் என்றது வெறும் மகிழ்ச்சி கொள்ளுதல் என்ற பொருளிலே அல்ல. திருவள்ளுவரின் திருக்குறள் முதலிய சிறந்த நூல்களிலே களித்தல் என்றால் கள்ளுண்டு களித்தல் என்றுதான் பொருள்.

கடிக்கும் வல்லரவும் கேட்குமே மந்திரம்; கள்ளுண்டு களிக்கின்ற உன்னை - மது உண்டு மயங்குகின்ற உன்னை - திருத்துவார் யாரும் இந்த நாட்டில் இல்லையே! உன்னுடைய செவிகைப்பச் சொல்லைக் காதிலே சேர்க்கின்ற அறிஞர்கள் இந்த நாட்டில் இல்லையே! இருக்கின்ற அமைச்சர்கள் நீ என்ன எண்ணுகிறாயோ அதையே அவர்களும் எண்ணுகின்றனர். நீ எண்ணியது எண்ணி உன்னை முடிக்கின்றனர். உன்னை அவர்களே முடிக்கின்றார்கள். இந்தப் பகையே உனக்குப் போதும்; வேறு புறப்பகையே உனக்கு வேண்டியதில்லை என்று சீதை சொல்லுகின்றாள். இந்த ஒரு பாட்டைத் திருக்குறளோடு இணைத்து நீங்கள் படித்து இன்புறவேண்டும் என்பது என்னுடைய கருத்து. மற்றொரு முறையும் பாட்டைச் சொல்லுகின்றேன்.

" கடிக்கும்வல் லாவும் கேட்கும் மந்திரம் களிக்கின் றேயை
அடுக்குமீ தடாதென் றுன்ற ஏதுவோ டறிவு காட்டி
இடிக்குந ரில்லை உள்ளார் எண்ணிய தெண்ணி உன்னை
முடிக்குநர் என்ற போது முடிவன்றி முடிவ துண்டோ "

குடிகளை அரசன் எப்படி ஆளவேண்டும்? என்பதைக் குறித்து ஆசிரியர் திருவள்ளுவனார் அருமையான ஒரு வாசகத்தை அருளி இருக்கின்றார்கள். அதை நமது தலைவரவர்கள் சொன்னார்கள் "அழக்கொண்ட எல்லாம் அழப்போம்" என்று. இது ஒரு அருமையான வாசகம். பிறநாட்டார் அழஅழ அவர்களிடமிருந்து பறிக்கின்ற நாட்டின் செலவங்களும், பறித்துக்கொண்டவன் அழ அழ அவன் கையை விட்டுப்போய்விடும். அவர்கள அழக்கொண்டது எல்லாம இவர்கள் அழஅழப் போய் விடும என்ற அருமையான கருத்தைக கொண்டது இந்தத் திருக்குறள்.

" அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பாலவை "

பிறர் அழும்படியாகக் கைப்பற்றிய பொருள்கள் எல்லாம் இவன் அழஅழ இவனை விட்டு நழுவிப்போகும் என்ற கருத்து இன்று இந்த உலகத்தை எலலாம் ஆளுகிற சபைகளிலே நலல பொன்னெழுத்துக்களால் எழுதப் படவேண்டும அலலவா! "அழக்கொண்ட எல்லாம அழப்போம்" இந்த ஒரு வாசகம போதுமே, உலகத்தை நன்னெறிப்படுத்துவதற்கு; பிறநாட்டார் அழ அழ அவர்களுடைய பொருளைக்கொள்ளலாகாது என்பதற்கு.

குடிகளை எப்படி அரசாளவேண்டும் என்பதற்குச் சுருக்கமாக ஒருகருததைச் சொலகிறார். அலலற்பட்டு அழுகின்ற நாடு எதுவோ அது அழிகின்ற நாடு. அரச னுடைய செல்வத்தை - அரசனுடைய வளத்தை அறுக்கின்ற ஒரு கருவி, குடிகள் விடுகின்ற கண்ணீர். இதற்கு இலக்கியம் சிலப்பதிகாரம். எப்படி? கடிக்கும்

வல்லரவுக்குக கம்பனிடம் சென்றோமோ அப்படியே கண்ணீருககுக கண்ணகியிடம் செல்லுவோம். கண்ணகியின் கண்ணீர் நமமுடைய வளமார்ந்த பாண்டிய நாட்டு வேரை அறுத்துவிட்டதே. கண்ணகி விடுத்தாள் கண்ணீர். கண்ணீர் விட்டுக்கொண்டு மதுரைமா நகரத்தின் மத்தியிலே நின்றுகொண்டு,

" மாட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையை "

என்று கணவனை இழந்த கண்ணகி கதறியழுதாள்.

வீதியின் வழியாகப் போகின்றாள்; அப்பொழுது பொதுமக்கள் பேசிக்கொள்ளுகின்றனர். இப்பொழுது நாம் எல்லாம் பேசுகின்றோமே அநதயாதிரி. கையில் சிலம்பும, கற்றச்சடையும், விரித்த கருங்குழலும் கொண்ட கோலத்தை மதுரைமா நகரத்தார் கண்டனர்.

" மெய்யில் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்—வையக்கோன்
கண்டளவே தோற்றானக் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோன்றான் உயிர் "

இந்தககோலம் தெருவழியாகப் போவதைக் கண்டனர். தலைவிரிகோலமாகப் போகின்ற கண்ணகியைக கண்டார்கள். கண்டபோது என்ன நினைத்தார்கள். இப்படி கண்ணீர் விட்டுச்செல்லுகின்ற இந்த மங்கையால் வளையாத செங்கோல் வளைந்ததே என்று வருந்தினர். இதுவரையிலும் அநீதி என்பதை அறியாது வாழ்ந்த மதுரைமாநகரத்தார், அல்லற்பட்டாற்றாது அழுதவளைக் கண்டு, வருந்தி வருந்தி அழுதார்கள்.

"அல்லலுற் றாற்று தழுவானைக் கண்டேங்கி
மல்லல் மதுரையார் எல்லாரும் தாம்மயங்கி
களையாத துன்பம்இக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது இதுஎன்கொல்?"

என்று சொல்லுகிறார்.

"அல்லற்பட் டாற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை."

என்று எடுத்த எடுப்பிலே திருவள்ளுவர் தெரிவிப்பதை நீங்கள்காண்கின்றீர்கள். இக்குறளின் சொல்லும்பொருளும் சிலப்பதிகாரத்திலே அழகாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அல்லற்பட்டாற்றாது கண்ணகி அழுதாள். அரசன் உயிர் இழந்தான். மதுரைமாநகரம் எரிந்து மாய்ந்தது என்று சொல்லுகிறார்கள், இப்படிச் சிறந்த அரசியல் உண்மைகள் திருக்குறளிலே காணப்படுகின்றன. இந்த அரசியல் உண்மைகளைக் காவியங்களிலும் ஆசிரியர்கள் நமக்கு நன்றாகக் காட்டி யிருக்கின்றார்கள். மிக மிக அருமையான நூல் இந்தத் திருக்குறள். இதன் நடுநாயகமாக விளங்குகின்றது பொருட்பால். பொருள் ஒன்று கிடைத்தால் அறமும் இன்பமும் வந்துவிடும். அறம் பொருள் இன்பம் இவற்றில், பொருளை யெய்தி விட்டால் அறமும் இன்பமும் தானேவரும். அந்த வகையிலே அறம் முன்னமே வந்துவிட்டது. அறத்தின் வழியாக வந்தபொருள் இன்று உரைவளத்தில் காணப்படுகின்றது. இனி அடுத்து இன்பத்தின் திறம் நமக்கு ஊட்டப்படும் என்று எண்ணுகிறேன். இப்படி ஊட்டுகின்ற மகாசந்நிதானம் அவர்கள் நீடூழி வாழ்க! அத்தகைய பாக்கியம்பெற்ற நீங்களும் நீடூழி வாழ்க என்று தெரிவித்துக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

விழாவிற்கு வாழ்த்துச் செய்திகள்

திரு. S. G. மணவாளராமாநுஜம் அவர்கள் M.A., Ph. D.

அண்ணாமலைநகர்

தஙகள் ஆதீனம் முன்னரே திருககுறள் அறததுப்பால் உரைவளம் வெளியிட்டுப் புகழுபெறறிருககினறது. இபபொழுது பொருட்பாலையும் வெளியிடுவது மகிழசசியைததருகின்றது. அரசியல பொருள்நூலகளில் நிபுணரான பொருட்செல்வா, டாகடா. ரா. க. சணமுகம் செட்டியாா அவாகள் தலைமையில பொருட்பால் வெளியீட்டுவிழா நடப்பது பாராட்டத தககது.

எந்நாளும் புலவர்களைப் போற்றிவரும் தங்கள் ஆதீனம் இவ்வமயம் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவாகளைக கௌரவிக்கத திருவுளம் கொண டதும் பொருததமானதே. ஆவணிமூலத திருவிழா இனிது நிறைவேறு வதாக.

திரு. எம். பி. ஸ்ரீநிவாஸன் அவர்கள் சென்னை.

திருநாளன்று திருககுறள் பொருட்பால உரைவள வெளியீடும், கல்விநிலையங்களின ஆணடுவிழாவும் கலநதுகொணடது விசேஷமும், பொருததமும் ஆனது திருககுறள் துறையில் ஆதீனததின் இணையற்ற சேவையைத தமிழுலகம என்றென்றும் போற்றும் தமிழவளாச்சிககாகப் பேருழியமபுரிநதுவரும் அறிஞா உயாதிரு சணமுகம் செட்டியார் வைபவத் தில் தலைமைதாஙகுவது தனிசசோபையூட்டும் எனபதில் ஐயம் இலலை.

தமிழ்ப்பேராசிரியரும், எனது மதிபபுககுகந்த நணபருமான உயாதிரு. சேதுப்பிள்ளை அவாகளுககுச் "சொலலின் செல்வர்" என்ற பட்டததை வழஙகத தாஙகள் முன்வநதிருப்பது தமிழுககே செயயும் தனிககௌரவ மாகும். அவாதுபேசசு இனிமையும, சுவையும், கருத்தாழமும் நிறைநதது; மேலும மேலும் கேட்க ஆவல் ஊட்டுவது.

தமிழ் 24-ந்தேதியையும ஆங்கில 9–9–51ம வழககமபோல் ஆராய்ந்து பார்ததேன். யாவறறையும ஓர் எண்ணுககினால் யான்வழிபடும் முருகப் பெருமானின் சிநதனையைக கிளறககூடிய '6' என்ற எண வருவதுகணடு தனிப்பட்ட மகிழசசி அடைகிறேன. விழா செவ்வனே நடைபெற அவன் அருளை வேணடுகிறேன.

திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் கோவை

ஆவணிமூலத் திருநாள் அன்று நடைபெறும் விழாக்கள் சிறப்பாக செவ்வையாக நடைபெறவேண்டும் என்று இறைவனை வழுத்துகின்றேன். திருக்குறள் பொருட்பால் வெளியீடு உரைவளத்துடன் உயர்திருவாளர். டாக்டர். R. K. சண்முகம் செட்டியார் அவர்கள் சீரியதலைமையில் நடைபெறும் செய்திகேட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். செந்தமிழ் வளர்ச்சியில் அளவுக்கடங்கா ஆர்வம்கொண்ட அப்பெரியார் இத்திருவிழாவிற்குத் தலைமை ஏற்றுக்கொண்டதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியைத் தமிழுலகம் முழுவதுமே அடையும். அறத்துப்பால் வெளியீட்டைக் கண்ட உலகம் பொருட்பால் எப்போது வருமோ என்று மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. உடனே வருகிறது என்ற செய்தி அறிந்ததும் தமிழ் உலகம் என்ன மகிழ்ச்சியுடன் உருகிப் பொங்கி வழியுமோ? எழுத்தால் கூற இயலாது. சந்நிதானத்திற்குத் தமிழுலகம் இப்படிப்பட்ட சிறந்த செய்கைகளுக்காக என்றும் மறவாத நன்றிசெலுத்தி இனிமேலும் இப்படிப் பட்ட வினைய நற்காரியங்களைச்செய்யும் பணியில் ஈடுபடவேண்டும் என்று இறைவனைப் பணிந்துகொண்டேயிருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

தமிழ் நீடூழிவாழ்க! சைவம் நீடூழிவாழ்க!! சந்நிதானம் நீடூழிவாழ்க!!!

திரு. டாக்டர். பா. நடராசன் அவர்கள் M.A., D.LITT., சென்னை.

பொருட்பால் வெளியீடும், கல்லூரி ஆண்டுவிழாவும் இனிது நடைபெறுக. "சொல்லின் செல்வன்" பட்டம் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கட்குப் பல்லாற்றானும் பொருந்தும். சொல்வன்மையேயன்றி, அனுமனின் வேறு பல அரிய பண்புகளையும் பிள்ளையிடம் காணலாம்.

டாக்டர், திரு அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் M. A,
அண்ணாமலைநகர்.

திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கட்குச் "சொல்லின் செல்வர்" என்ற பட்டம் வழங்கப்படுவது போற்றுதற்குரியதே.

அன்றியும், மடத்திலே செய்துவரும் தொண்டுகளிற் சிறந்த தமிழ்த் தொண்டாகிய "திருக்குறள்—பொருட்பால்—பலருரை—வெளியீடு" நாளை நிகழ்வது அறிந்து மகிழ்கிறேன். ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்பட வல்ல இவ்வெளியீட்டினைத் தமிழறிஞருள் விரும்பாதார் இரார். இவ்

வெளியீடு கலோலத்திற் பெரிதும் ஈடுபாடுடைய உயர்திரு. சண்முகம் செட்டியார் அவர்களுடைய தலைமையில் நிகழ்த்துவிக்கப்படுவது பாராட்டு தற்கு உரியது. விழாத்தலைவர்களும், பதிப்பாசிரியர் தேசிகரவர்களும் மேலும் சிறந்த தொண்டாற்றி வாழ்க!

தருமபுர மடத்தின் தலைவர் அவர்களுடைய தமிழ்த்தொண்டு நாளும் நாளும் வளர இறைவன் அருள்புரிக.

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் M.A., B.L., M.O.L., சென்னை.

திருக்குறள் பொருட்பால் உரைவளம் ஆவணிமூலத்தினன்று வெளியிடுவது கண்டு அடியேங்களுக்குப் பெருமகிழ்ச்சி. இவ்வாறு தனியாகத் திருநாளில் வெளியிடுவது நல்லது என்று கருதிய எம்போலவார் எண்ணம் நிறைவேறியது அடிகளார் பேரருளே. இன்பத்துப்பால் உரைவளமும் அண்மையில் வெளிவரும் என்று தமிழுலகம் தங்கள் அருளை எதிர்நோக்கி நிற்கின்றது. திரு. ச. தண்டபாணியார் தங்கள் அருளால் வாழ்க!

"சொல்லின் செல்வன்" என்று தமிழ்க் கம்பன் கண்ட பட்டத்தினை அடிகள் தமிழ் அறிஞர் ஒருவர்க்குச் சூட்டிப் பொன்னுடைபோர்த்தும் திருவிழாவும் நடைபெறுவதுகண்டு எங்களுக்கெல்லாம் பட்டஞ்சூட்டிப் பொன்னுடைபோர்த்தியதுபோலவே கொண்டு களிப்புறுகின்றோம்.

தருமையின் தமிழ்ச்சிவப்பெருமை மேலும் மேலும் ஓங்கி வளர்க! தமிழ்நாடு வாழ்க!!

ஸ்ரீமதி. ந. த. இராஜேசுவரி அம்மையார் அவர்கள் சென்னை.

பொருட்பால் உரைவள வெளியீடு, தமிழறிஞர் உலகமறிந்த அரசியல் வாதி திரு. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் நிகழ்வது மிகப் பொருத்தமேயாம். இந்த உரைவளத்தை அமைத்துத்தந்த நண்பர் திரு. ச. தண்டபாணி தேசிகருக்குத் தமிழ்நாட்டின் நன்றி உரியது. ஆனால், கடவுள்போல அனைத்தையும் ஆக்குவிக்கும் அடிகள் அருள் இல்லையானால் இத்தகைய பெருநூல் இவ்வளவு அழகாக, இவ்வளவு பொருட்செலவில் வந்திருக்கமுடியாது. தமிழின் பெருமையெலாம் தருமை அடிகளதேயாம்.

அக்காலப் புலவர் நூலை வெளியிடுவதோடு இக்காலப் புலவர்க்கும் பட்டமளித்துப் பொன்னுடைபோர்த்தும் சீரிய சைவத் திருத்தொண்டும்

தங்கள் திருமுன்பு அன்று நிகழ இருப்பது கேட்டுத் தமிழ்மக்கள் அனைவரும் தருமையை வாயார வாழ்த்தாது இருக்க முடியாது. 'சொல்லின் செல்வர்' எனத் திருவாளர் சேதுபபிள்ளை அவர்கள் எங்களிடையே நீண்டகாலமாக வாழ்ந்து வருகிறார். இருந்தாலும் வசிஷ்டர் வாயால் இராஜ ரிஷி என வழங்குவதே பொருத்தமாகும. அதுபோல சைவமும் தமிழும குருவடிவம் கொண்டு விளங்கும் அடிகள் அத்திருப்பெயரை நிலைநாட்டுதலும வேண்டும். வாழ்க குறள்! வாழக சொல்லின் செல்வர்! வாழ்க தருமை! வாழ்க சைவம்! வாழக தமிழ! வாழக அடிகள்!

திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B.A., B.L., சென்னை.

விழா ஆண்டவன் திருவருட்டுணைகொண்டு உயர்திரு. டாகடர். ரா. க. சண்முகம செட்டியார் அவர்களது சீரிய தலைமையில நடைபெறுவது பற்றிக் களிபேருவகையடைகின்றேன. மிகவும் சிறப்பாக இருக்கும். மகாசந்நிதானங்கள் அருட்கருணையால இத்தகைய பலபல பெருமபேறுகள் தமிழநாடு அடைய அவன அருளைச சிநதிக்கினறேன்.

திரு. பெ. திருஞானசம்பநதம் அவர்கள் M. A., திருவையாறு.

உயர்திரு. செட்டியார் அவர்களின் சீரிய தலைமையில் 'பொருள்' வெளியீடு செய்வித்தது ஆதீனத்தார 'அருள்' வழஙகுவது சாலப் பொருந்துவதாகும, 'சொலலின செலவா'களைப் போற்றுவதும், ஆனந்தக் கூத்தனின சிலமபொலி கேட்கச செய்வதுமே நல்லரசு எனும் குறிக்கோளைக கொண்ட ஆதீனகர்த்தா தமது இன்றைய விழாவிலும் இவற்றிறகு இடநதநதுப் போற்றிவருவது எம்போலவாருககுப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. விழா இனிது நிறைவேற ஸ்ரீசொககலிஙகப்பெருமானின் திருவருளை இறைஞ்சுகின்றேன்.

சிவககவிமணி, திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B.A., கோயமுத்தூர்.

திருக்குறள்–பொருட்பால்–உரைவள வெளியீடு தமிழுககும் சைவத்திககும ஒருஙகேசெயயும பெருமபணியாகும. அறத்துப்பால் வெளியீட்டைத் தொடாநது இதுவும வெளிவருவது நமது ஆதீனத்துககுப் பெருமை தரும் தொண்டாக உலகம போறறத்தககது. இதனைத் தொடர்ந்து காமத்துப்பால் என்னும் இனபத்துப்பாலும் உரைவள வெளியீடு வருவது தககதேயாகும்.

மகாசந்நிதானங்களின் அருளாட்சியில் நிறுவப்பெற்று நன்கு நடைபெற்றுவரும் பாடசாலை, கல்லூரி இவற்றின் ஆண்டுவிழாக்கள் சிறப்புற நடைபெறத் திருவருள் துணைசெய்க.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானங்களின் அருளாட்சி இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து சிறந்தோங்கிச் சைவத்தமிழ் உலகத்துக்கு மேம்பாடு பலவும் அருளி வாழ்க.

திரு. S. நடராஜ நாடார் அவர்கள் B.A., B.L., சேலம்.

உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுக்கு 'சொல்லின் செல்வர்' என்னும் பட்டம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களே வழங்கப்போவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அவர் தமிழ் இலக்கியத்திற்குச் செய்துள்ள தொண்டு மிக்கபாராட்டத்தக்கதே. அதைத் தருமபுர ஆதீனம் அங்கீகரித்துப் பாராட்டுவது தமிழ்நாட்டிற்கே பெருமை எனக் கருதுகிறேன்.

மேலும் உயர்திரு டாக்டர். ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள் சீரிய தலைமையில் திருக்குறள் பொருட்பால் உரைவளம் வெளியிடுவது நிரம்ப பொருத்தம். சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் தங்கள் ஆதீனம் தமிழ்நாட்டிற்கு மேன்மேலும் இலக்கியச் சுவையும் அருள் சுவையும் அளிக்குமாறு பிரார்த்திக்கிறேன்.

திரு K. S. விசுவநாத சாஸ்திரி அவர்கள் திருப்பதி.

ஆவணிமூலத் திருநாள் அடியார்பெருமையை இறைவன் அருட்டிறங் காட்டி வெளிப்படுத்திய நாள் திருக்குறள் உரைவளமும் வெளிப்படுகின்றது பொருத்தமே. ஆதீனப் பல்கலைக்கல்லூரி முதலிய கலவிநிலையங்களின் ஆண்டுவிழாவும் நிகழ்கின்றது. அவற்றின் சிறப்பும் அர்நன்னுளில உலகம் அறிவதும் இன்றியமையாததே. இவ்வெல்லாம் பொருத்தமுறக் கண்டு அமைத்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் திருவுள்ளப்பாங்கே பெறலருஞ்சிறப்பிற்கு உரியது. இவ்விழா இறைவன் அருளால் இனிது நிறைவேறுவதாகுக என எம்பெருமான் சோமசுந்தரக்கடவுளின் இணையடி இறைஞ்சுகின்றேன்

திரு. ந. சிவகுருநாதபிள்ளை அவர்கள் ஊத்துக்குடி.

நண்பர், திரு. ரா. பி. சேதுப்பிள்ளை B.A., B.L., அவர்கட்குத் தேவரீரவர்கள் "சொல்லின் செல்வர்" என்னும் பட்டம் அளிப்பது மிகவும்

பொருத்தம் உடையது. திருக்குறள் உரைவளம் பொருட்பால் வெளியிடப்பெறுவது மிகமிகச் சிறந்தபணி. எஞ்சிய காமத்துப்பாலும் விரைவில் வெளியிடப்பெறும் என்று நம்புகின்றேன்.

"செந்தமிழும் சிவநெறியும் தழைத்தோங்கிச் சிறந்தொளிர
எந்தைதிருக் கயிலாய பரம்பரைஇத் தரைமல்க
வந்ததிருச் சுப்ரமண்ய மாகுரவன் மலர்த்தாள்கள்
பந்தமலத் தொடக்கறுத்துப் பரகதிவீ டுய்த்திடுமே."

வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்
ஆரணி. (வட ஆறுகாடு.)

இருவேறு செல்வமும் பெருவாரியாகப்பெற்று விளங்கும் திருவாளர் டாக்டர். ரா. க. சண்முகம் செட்டியாரவர்கள் தலைமையில், பொருட்பால் உரைவளம் வெளியிடுதல் மிகப் பாராட்டத்தக்க அறிவுடைச்செயலே. அத்தகைய சான்றோர்கள் ஆர்வமும் முயற்சியும் ஆதரவும் தோன்றிய பின்னரே தமிழ்மகள் இந்நாளில் பலர் நெஞ்சிற் குடிபுகுந்தாள். அவளது நல்வளர்ச்சிக்கு இவ்விழா விழுமியதே.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர், திருவாளர், இராச வல்லிபுரம், பி. சேதுப்பிள்ளை அவர்கள் B.A., B.L., உலகில் விளங்கத் தொடங்கிய நாளிலேயே 'சொல்லின் செல்வன்' தலைப்பிற் சொற்பொழி வாற்றிப் பெரும்புகழ் பெற்றூர்கள். அவர்கட்கு, அதுவே தக்கதொரு பட்டப்பெயராக அமையுமென்று கருதினோர் பலரிருக்கலாம். ஆயினும், அப்பட்டம் அவர்க்கே உரியதென்று நினைந்து ஆக்கிய நல்லோர் எவருமிலர். அதனை அவர்க்கே உரித்தாக்கத் திருவுளங்கொண்டருளிய சிறப்பு தேவரீர்க்கே உரித்தாயிற்று. அதுபற்றி அடியேனும் பெரிதும் இன்புறுகிறேன்.

ஆனந்தவிகடன் துணையாசிரியர், நண்பர், பிர்மஸ்ரீ. பி. ஸ்ரீ. ஆசாரியார் அவர்கள் "ஆனந்தக் கூத்து" கண்டார்க்குமன்றிக் கேட்டவர்க்கும் படித்தவர்க்கும் ஆநந்தம் விளைக்கும். எல்லோரும் இனிது வாழ்க! தருமபுரம் மடாலயம் செழிக்க!! எங்கள் குருமகாசந்நிதானம் பல்லாண்டு பலலாண்டாக நீடினிது வாழ்க!!!

திரு. T. V. சதாசிவபண்டாரத்தார் அவர்கள், அண்ணாமலைநகர்.

புலவர் தலைவராகவும் தமிழ்மொழியின் புரவலராகவும் உள்ள உயர் திருவாளர், டாக்டர், ரா. க. சண்முகஞ் செட்டியார் அவர்கள் தலைமையில்

திருக்குறள் பொருட்பால் வெளியீடு நடைபெறுமாறு தாங்கள் திருவுளம் கொண்டது, தாய்மொழியாகிய தமிழின் எதிர்கால ஆக்கத்தையும் சிறப்பையும் நன்கு உணர்த்துவதாக உள்ளது.

தமிழ்ப்பேராசிரியர், உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கட்குப் பட்டம் வழங்குவது சிறந்தபுலவர்களைப்பாராட்டும் ஆதீனத்தின் பண்டைப் பெருமையினை உறுதிப்படுத்துகின்றது.

திரு. A. S. ஞானசம்பந்தன் அவர்கள் M. A., சென்னை.

பண்டுதொட்டே சைவமும் தமிழும் ஒன்றாகவே வளர்ந்து வந்துள்ளன. சமயத் தலைவர்கள் தமிழ்ப்பெரியார்கட்குச் சிறப்புச்செய்வது நம் பண்பாட்டிற்குப் புதியதொன்றன்று. இடைக்காலத்து மறைந்து நின்ற இப்பழக்கத்தைத் தருமையாதீனம் முன்புதொட்டே வெளிக்குக் கொண்டு வந்து நடைமுறையில் செய்விப்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

தமிழுலகம் நன்கு அறியும் ஒரு பெரியாருக்குச் சைவசமயத் தலைவர் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தும் இந்நாள் தமிழினத்தின் வளர்ச்சி ஏட்டில் சிறந்த இடம் பெறும். இத்தகைய அருந்தொண்டுகள் ஆற்றிவரும் தருமையாதீனம் நன்கு வளர இறைவன் அருள்புரிவானாக! தமிழர் தவப் பயனாய் வெளிவரும் 'பொருட்பால்' உரைவளம் சிறப்புறுவதாக!!

வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமிப்பிள்ளை அவர்கள் திருவையாறு.

கலாபூரணராகிய உயர்திரு. ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையின்கீழ் பொருட்பால் உரைவள வெளியீடு பெருவளமுறத்திகழப் பெறுவதும், உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கட்குச் '**சொல்லின் செல்வன்**' எனத் தக்கதோர் பட்டமளிக்கப் பெறுவதும் மிகமிகப் போற்றத் தக்கதொன்றாகும். அருவுருவத் திருவுருவாம் சொக்கலிங்கப்பெருமான் திருமுன் உருவத்திருவுருவாம் ஆனந்தக்கூத்தனின் 'ஆனந்தக்கூத்து' பேசப்பெறுவது ஒரு திருக்கூத்தேயாகும். உலகெலாஞ் சிலம்பச் 'சிலம்புச் செல்வம்' எனும் நாடகம் நடிக்கப்பெறுவதும் ஓரற்புதம். எல்லாம்வல்ல திருவையாறன் அடித்தலப்பெருமையால் இனிதே நிறைவேறுவதாக.

திரு. க. சுப்பிரமணியன் B.A., அவர்கள் சென்னை.

திருக்குறள் பொருட்பால் உரைவள வெளியீட்டைத் தமிழுலகம் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டுள்ளது. உரைவள அழகும் பதிப்பு

முறையின மேன்மையும தருமபுர ஆதீனததிற்குச் சிறப்பாக அமைந் துள்ளனவன்றோ !

கல்லூரிகள் ஆணடுவிழா நடப்பதறிந்து அகமகிழ்கின்றேன். ஆதீனத தின் பேராதரவைப பெறறுவரும இககலவி நிலயஙகள் மேன்மேலும் அபிவிருததியடைநது நனமாணுககாகளைப புகழுடன பெருககிககொண டிருகக இறைவன திருவருள்பாலிப்பானுக.

புலவரைப் போறறும்முறையில சிறந்த பேராசிரியராகிய ஸ்ரீ பிள்ளை அவர்களுககுச "சொலலின செலவா" எனற பட்டம் வழஙகபபெறுவது மிகவும் சிறபபானதே. தமிழசசெலவததிறகு ஆதீனம் செயதுவரும சீரிய பணிகளில இது தலைசிறநதது. புலவாகளைப் பாராடடும இததிருவிழா சிறப்பாக நிறைவேற இறைவன் திருவருளைச சிநதிககின்றேன்.

திரு. தி. பொ. மாணிக்கவாசகம் அவர்கள திருச்சி.

இறைவன் திருவருளால மதிப்பிற்குரிய சிலம்புச செலவா உயர்திரு. ரா. க. சண்முகம் செட்டியாா சீரியதலைமையில் விழா சிறப்பாக நடைபெற விரும்புகினறேன். இமமாதிரி சபையில தமிழன்பாகளுககுப பட்டம் கட்டுவது மிகபபொருததமானது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவாகள் தமிழுககும, தமிழ இசைககும, சைவததிற்கும் ஆற்றிவரும் செயலும் மிகப் பாராட்டததககன.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரமபரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதபபடும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயததின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம, மாயூரம் P. O.

ஸ்ரீ காசிமடத்தின் பேரறக்கட்டளை:

அவிநாசியில்

முந்நூல் அணியும் கலியாண நிதி

மூலதனம் ரூபாய் 5000.

1. சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பெற்று வன்றொண்டர் என்னும் நாமம் பெற்றவரும், தென்றமிழ்ப் பயனாயுள்ள திருத்தொண்டத்தொகை பாடியருளியவரும், செங்கல்லைப் பொன்னாக்கியும், குண்டையூரில் நென்மலை பெற்றும், முதுகுன்றில் ஆற்றிலிட்ட பொன்னைத் திருவாரூரில் குளத்தில் எடுத்தும், பரவையாரிடத்துச் சிவபெருமானைத் தூதுபோக்கியும், அவிநாசியில் முதலையுண்ட பாலனை அழைத்தும், இன்னோரன்ன பல அற்புதங்களைச் செய்தருளி, வெள்ளையானைமீது ஏறிச் சேரமான் பெருமாணாயனார் உடன்வரக் கயிலை சென்றவருமாகிய ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளை மக்கள் நினைந்து உய்தற்பொருட்டும் கன்னித் தண்டமிழ்ச் சொல்லின் தெய்வத்திறத்தை யுன்னிப் போற்றுதற்பொருட்டும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இஃது 'அவிநாசியில் முந்நூல் அணியும் கலியாண நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய மூலதனம் 3½% வட்டிதரக்கூடிய ரூ 5000/- ரூபாய் ஐயாயிரம் பெறுமானமுள்ள பத்து வருஷ டிரஷரி சேவிங்க்ஸ் டெபாசிட் சர்டிபிகேட்டாக உள்ளது (3½ Ten Year Treasury Savings Deposit Certificate MS. 000696 for Rs. 5000) திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி நிர்வாகக்குழுவினரே இந் நிதியைப் பரிபாலனஞ் செய்வர்.

3. இம் மூலதனத்திற்கு ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித்தொகையிலிருந்து ஆண்டுதோறும் (அ) கோயம்புத்தூர் ஜில்லா அவிநாசி என்னும் திருத்தலத்தில் பின் 4-ம் பாராவில் குறித்த நிபந்தனைகளின்படி முந்நூல் அணியும் கலியாணம் நடத்தப்பெற்றவர்க்கு அளிக்க ரூ 75. ரூபாய் எழுபத்தைந்தும் (ஆ) இந்த நிதியைப் பரிபாலனஞ் செய்ய ரூ. 10. ரூபாய் பத்தும் (இ) பின் 5-ம் பாராவில் குறித்துள்ளவாறு 'சுந்தரமூர்த்தி

சுவாமிகள் நினைவுத் தமிழ்ப் பரிசு' வழங்க, மேல் அ. ஆ பிரிவுகளில் குறித்துள்ளவாறு வட்டியிலிருந்து செலவான ரூ. 85-போக எஞ்சிய தொகையும பயன் படுததப்பெறும.

4. முந்நூல் அணியும் கலியாண உதவிபெற நிபந்தனைகளாவன:

அ. கோயமபுத்தூர் ஜில்லா அவிநாசி என்னும தலத்து எல்லைக்குள் முந்நூல அணியும கலியாணம (உபநயனம) நடததப பெற்ற அநதணச் சிறுவர (Hindu - Brahmin) ஒருவருக்கு உதவித்தொகை ரூ. 75: ரூபாய எழுபத்தைநது அளிககப் பெறும்.

ஆ. அவ வந்தணச் சிறுவர்க்கு முந்நூல் அணியும கலியாணம் (உபநயனம) நடநத நாளில் 15-வயது நிரமபாதிருத்தல் வேண்டும்.

இ. அந்தப் பிராமணசசிறுவர் அவிநாசியில்பிறநதவராயும் அவிநாசியில் வசிப்பவராயும இருத்தல் வேண்டும.

ஈ. முந்நூல் அணியும கலியாணம நடநத ஒரு மாதத்திற்குள் (1) அவிநாசிப் பஞ்சாயதது போாடு தலைவர் அவர்களிடமிருநது "அவ அந்தணச்சிறுவாககு உபநயனம நடநத தேதி, அவா பிறநததேதி, அவர் அவிநாசியில் பிறந்தவர், அவிநாசியில் வசிப்பவர், அவர் ஏழை." என்ற விபரங்கள் அடஙகிய ஒரு அத்தாட்சிப் பததிரமும (2) அவிநாசி தாலுக்கா தாசில்தார் அல்லது இப்பதவிககுக் குறையாத வேறு அரசியல் அலுவலாளரிடமிருநது விண்ணப்பதார் ஏழை என்பதறகு ஒரு அததாட்சிப் பத்திரமும பெற்றுத் தஞசாவூர் ஜில்லா திருப்பனந்தாள் செநதமிழ்க் கல்லூரி நிரவாகக் குழுவினருக்குத் தபால் மூலம விண்ணபபித்துக் கொள்ளவேண்டும.

உ ஆண்டுதோறும் டிசமபர் மாதம 5-ந தேதி வரை பெற்ற விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பெற்று, அநதநத ஆண்டு டிசமபர் மாதம 31-ந தேதிக்குள உதவிபெறுவதற்குத் தகுதியுடைய ஒருவர்க்குமட்டும உதவித்தொகை ரூ. 75. ரூபாய் எழுபத்தைநது மணியாாடர் மூலம அனுப்பப்பெறும். உபநயனம நடந்தவருக்கே உதவிததொகை அனுப்பப்பெறும்.

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி நிர்வாகக் குழுவினர் தீர்ப்பே முடிவானது.

ஊ. இவ்வுதவிபெற விண்ணப்பங்கள் வாராத ஆண்டில் இதற்கென ஒதுக்கிய ரூ. 75. ரூபாய் எழுபத்தைந்தும் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்துக்கு ஏழைகளுக்கு அன்னமளிக்க அனுப்பப்பெறும்.

5 ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் நினைவுப் பரிசுக்குரிய நிபந்தனைகளாவன :—

அ திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் வித்துவான் முதல் யாண்டு வகுப்பில் படித்து ஆண்டுத்தேர்வில் முதல் எண் பெற்றுத்தேறிய ஒரு மாணவருக்கு ஒரு பரிசும், ஷை கல்லூரி வித்துவான் மூன்றும் ஆண்டு வகுப்பில் படித்து ஆண்டுத்தேர்வில் முதல் எண் பெற்றுத் தேறிய ஒரு மாணவருக்கு ஒரு பரிசும் ஆக இரண்டு பரிசுகள் அளிக்கப்பெறும் பரிசுத்தொகை அந்தந்த ஆண்டு வட்டி வரவுக்கு ஏற்றவாறு இருக்கும் (மேல் 3-இ பார்க்கவும்) ஒவ்வொரு பரிசின் உத்தேசத் தொகை ரூ. 30. அந்தந்த ஆண்டு வட்டி வருமானத்துக்கு ஏற்றவாறு பரிசுத் தொகையைக் குறைக்கவும், கூட்டவும் கூடும்.

ஆ. இப் பரிசுகள் ஆண், பெண், சாதி மதப் பகுப்பு வேறுபாடின்றி அளிக்கப் பெறும்.

இ இப் பரிசுக்குரியவர்கள் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த பெரிய புராணத்தில் வெள்ளானைச் சருக்கம் 'மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய்' என்று தொடங்கும் திருப்பாடல் முதற்கொண்டு 'என்று மின்பம் பெருகும் இயல்பினால்'' என்ற திருப்பாடல் உட்பட உள்ள 53 பாடல்களையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத் தொகைப் பதிகம் (தில்லை வாழந்தணர் என்று தொடங்கும்) 11 பாசுரங்களையும் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கவேண்டும்.

ஈ. மனப்பாடத் தேர்வில் வெற்றிபெறாத மாணவருக்கு இப்பரிசு அளிக்கப்பெறமாட்டாது. அங்ஙனம் அளிக்கப்பெறாவிடின் ஆண்டுத் தேர்வில் இரண்டாவது எண் பெற்றுள்ள மாணவருக்கு மேலே குறித்துள்ள நிபந்தனைகளின்படி இப் பரிசுகள்

வழங்கப் பெறும். இம்மாணவரும் மேற்குறித்த பாடல்களை மனப்பாடஞ் செய்து ஒப்பிக்காவிடின் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி நிர்வாகக் குழுவினர் பரிசு தருவதற்கென உள்ள இத் தொகையை வேறு முறையில் இக் கல்லூரியில் தருமம் செய்யலாம்.

உ. ஒரு முறை பரிசுபெற்றவரே மறுமுறையும் இதே பரிசுக்குரியவர் ஆயின் மேல் இ-பிரிவில் குறித்த 64 திருப்பாடல்களோடு ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய 'எற்றான் மறக்கேன்' என்று தொடங்கும் திருப்புக்கொளியூர் அவிநாசித் திருப்பதிகப் பாடல்கள் பத்தும் மனப்பாடமாக ஒப்பிக்க வேண்டும். இன்றேல் மேல் ஈ.பிரிவில் குறித்தவாறு நடத்தப் பெறும்.

ஊ பனசைச் செந்தமிழ்க் கல்லூரி பிரின்சிபால் ஷை கல்லூரி நிர்வாகக் குழுவினரின் ஒப்புதல் பெற்று ஷை கல்லூரி இன்னொரு ஆசிரியருடன் கலந்து இப் பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வினை ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் 31-ந் தேதிக்குள் நடத்தவேண்டும்.

எ. செந்தமிழ்க் கல்லூரி ஆண்டு விழாவின் போது இப் பரிசுகளை அளித்தல் வேண்டும்.

6. செந்தமிழ்க் கல்லூரி நிர்வாகக் குழுவினர் ஆண்டு தோறும் வரவு செலவுக் கணக்கையும், அவிநாசியில் மங்கல நூல் அணியும் கலியாண உதவித்தொகை அளித்த விபரமும், உபநயன உதவி பெறுவிடின் ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்திற்குத் தொகை அனுப்பிய விபரமும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் பரிசு அளித்த விபரமும், தொகையும், இத் தருமத்தை நிறுவியவர்களுக்கும் அவர்கட்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களுக்கும் அனுப்புவிக்க வேண்டும்

7. மூலதனம் அரசியலாரால் திருப்ப அளிக்கப்பெற்றால் அதிக வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களிலேயே முதலீடு செய்யவேண்டும். இத்தருமம் இதில் விவரித்துள்ளவாறே பயன் படுத்தப்பெறல் வேண்டும்.

திருப்பனந்தாள், 3—9—51. } (Sd). காசிவாசி அருள்நந்தித் தம்பிரான்.

Registered at Tiruvadamarudhur Sub Registrars' office on 3—9—1951 as No 49 of 1951, Book No. 4, Volume 44, pages 26 to 30.

நான்கு வகைப்படும் என்று கூறுவர் ஆசிரியர். முறைப் பெயர்க் கிளவி எனப்பட்டது இரண்டுவகைப்படும். இவ்வாறு இவை வகைப்பட்டமையின ஏனையவும அவ் வகைப்படுங்கொல என்று ஐயுறின், அவ்வகைப்படா ஒழிந்த பெயர்கள் ஐந்தும அவ்வோதிய வாய்பாடே யாகும் மரபினையுடைய என்றவாறு.

மேல் தொகையான் ஒன்பது எனப்பட்ட விரவுப் பெயர் இவ்விரி நிலையால் பத்தொன்பதாயின எனக கொள்க. (உக)

அவைதாம்,

பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்
பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயரென்
றந்நான் கென்ப இயற்பெயர் நிலையே. 179.

என் - எனின், மேல் இயற்பெயர் நான்கு என் றமையின் அவற்றது பெயரும் முறையும் உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: அவ்வாறு வகுககப்பட்டனதாம் யாவை எனின் பெண்மை யியற்பெயரும், ஆண்மையியற்பெய ரும், பன்மையியற்பெயரும், ஒருமையியற்பெயரும் என்று சொல்லப்பட்ட அந்நான்கும என்ப இயற் பெயரது நிலைமையை என்றவாறு. (உஉ)

பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயரென்
றன்நான் கென்ப சினைப்பெயர் நிலையே. 180.

என் - எனின், சினைப்பெயர் நான்கு என்றமையின் அவற்றது பெயருமமுறையும உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- பெண்மைச் சினைப்பெயரும, ஆண்மைச் சினைப்பெயரும், பன்மைச் சினைப்பெயரும், ஒருமைச்

சினைப்பெயரும் என்னப்பட்ட அநநான்கும் என்று சொல்லுப சினைப்பெயரது நிலைமையை என்றவாறு. உரு

பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென்
றந்நான் கென்ப சினைமுதற் பெயரே. 181.

என் - எனின், சினைமுதற் பெயரும் நான்கு என்றமையின் அவற்றது பெயரும் முறையும் உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரும், ஆண்மை சுட்டிய சினைமுதற்பெயரும், பன்மைசுட்டிய சினைமுதற் பெயரும், ஒருமைசுட்டிய சினைமுதற் பெயரும் எனப்பட்ட அந்நான்கும என்று சொல்லுப சினைமுதற்பெயர் என்றவாறு. (உச)

பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப்
பெயரென்
றுயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே. 182.

என் - எனின், முறைப்பெயரும் இரண்டுவகைப் படும் என்றமையின் அவற்றது பெயரும் முறையும் உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- பெண்மை முறைப்பெயரும், ஆண்மை முறைப்பெயரும் எனப்பட்ட அவ்விரண்டும் என்று சொல்லுப முறைப்பெயரது நிலைமையை என்றவாறு.

பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே. 183.

என் - எனின், மேல் விரித்தவற்றுள் பெண்மைப் பெயரெல்லாவற்றையும தொகுத்துத் திணைக்கு உரியவா மாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- மேல் விரித்தோதினவற்றுள் பெண்மை யைக் கருதின எல்லாப் பெயரும் அஃறிணையுள் பெண் ணென்றற்கும உயர்திணையுள் ஒருதிக்கும் நிற்றல் பொருந்தின என்றவாறு.

பெண்மை சுட்டிய பெயர் பெண்மை இயற்பெயர் எனவும், பெண்மைச் சினைப்பெயர் எனவும், பெண் மைச் சினைமுதற்பெயர் எனவும், பெண்மை முறைப் பெயர் எனவும் நான்கு வகைப்படும.

உ - ம்:- பெண்மையியற்பெயர் - சாத்தி வந்தது, சாத்தி வந்தாள் எனவரும், பெண்மைசினைப்பெயர் - முடத்தி வந்தது, முடத்தி வந்தாள் எனவரும், குறளி என்பதும் அப்பாற்படும; பெண்மைச் சினைமுதற்பெயர்- முடகொற்றி வந்தது, முடகொற்றி வந்தாள் என வரும். பெண்மை முறைப்பெயர் - தாய் வந்தது, தாய் வந்தாள் எனவரும். ஆய் என்பதும் அது. யாய்என்பதோ எனின், தன்மையோடடுத்தமையின் முறைப்பெயரே னும் உயர்திணை எனப்படும். (உசு)

ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒனறற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே. 184.

என் - எனின், ஆண்மைப்பெயர் எல்லாவற்றையும் தொகுத்துத்திணைக்குரியவாமாறுஉணர்த்தல்நுதலிற்று.

இ - ள்:- ஆண்மையைக் கருதின பெயர்களெல்லாம் அஃறிணையுள் ஆண் ஒன்றற்கும் உயர்திணையுள் ஒரு வற்கும் நிற்றல் பொருந்தின என்றவாறு.

அவை ஆண்மையியற்பெயர் எனவும், ஆண்மைச் சினைப்பெயர் எனவும், ஆண்மைச் சினைமுதற் பெயர் எனவும், ஆண்மை முறைப் பெயர் எனவும் நான்கு வகைப்படும்.

ஆண்மையியற்பெயர் - சாத்தன் வந்தது, சாத்தன் வந்தான் எனவரும். ஆண்மைச் சினைப்பெயர் - முடவன் வந்தது, முடவன் வந்தான் எனவரும். ஆண்மைச் சினை முதற் பெயர் - முடகொற்றன் வந்தது, முடக் கொற்றன் வந்தான எனவரும, ஆண்மை முறைப் பெயர் - தந்தை வந்தது, தந்தை வந்தான் எனவரும். நுந்தை யெனபதும அது. எந்தை என்பது தன்மை யடுத்தமையின உயர்திணைப் பெயராம். (உஎ)

பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவர் என்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே. (185)

என் - எனின், பன்மைப் பெயரெல்லாவற்றையும் தொகுத்துத் திணைக்கு உரியவாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- பன்மையைக் கருதிய எல்லாப் பெயர் களும அஃறிணைககண் ஒன்றும் பலவும், உயர் திணைக்கண் ஆண்பாலும பெண்பாலும் என்று சொல் லப்படும நான்கு பாற்கும ஒரு தன்மைய என்றவாறு.

பன்மை சுட்டியபெயர் பன்மை இயற்பெயரும், பன்மைச் சினைப்பெயரும், பனமைச் சினைமுதற்பெயரும் என மூன்று என்று உணரப்படும். ஈணடுப் பன்மை எனறது இருதிணைப் பன்மையும அன்று; பலபால் மேலும் வருதலின் பன்மை என்றாராகக் கொள்க.

உ - ம்:- பன்மை யியற்பெயர் - யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள் என

வரும். பன்மைச்சினைப்பெயர் - நெடுங் கழுத்தல் வந்தது, வந்தன, வந்தான், வந்தாள் எனவரும். பன்மைச் சினைமுதற் பெயர் - பெருங்கால் யானை வந்தது, வந்தன, வந்தான், வந்தாள் எனவரும்.

ஈண்டு ஒன்றே என்றதனை அஃறிணை ஆண் ஒன்றினையும் பெண் ஒன்றினையுமாகக் கொள்க. பன்மைக்கும் அஃதொக்கும். உயிரில ஒன்றும் பலவும் கொள்ளற்க. ஒருவர் என்பதனை உயர்திணை இருபால்மேலும் கொள்க. (உஅ)

ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே. (186)

என் - எனின், ஒருமைப்பெயர் எல்லாவற்றையும் தொகுத்துத் திணைக்குரியவாமாறுணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- ஒருமையைக் கருதின எல்லாப் பெயரும் அஃறிணையுள் ஒன்றற்கும் உயர்திணையுள் ஒருவற்கும் நிற்றல் பொருந்தின என்றவாறு.

ஒருமைப்பெயர் ஒருமை யியற்பெயரும், ஒருமைச் சினைப்பெயரும், ஒருமைச் சினைமுதற் பெயரும் என மூன்று வகைப்படும்.

உ - ம்:- ஒருமை யியற்பெயர் - கோதை வந்தது, வந்தான், வந்தாள் எனவரும். ஒருமைச்சினைப்பெயர் - செவியிலி வந்தது, வந்தான், வந்தாள் எனவரும். ஒருமைச் சினை முதற்பெயர் - கொடும்புறமருதி வந்தது, வந்தான், வந்தாள் என வரும். (உகூ)

தாமென் கிளவி பன்மைக் குரித்தே. (187)

என் - எனின், தாம் என்பது திணைக்குரித்தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- தாம் என்பது இருதிணைப் பன்மைக்கும் உரித்து என்றவாறு.

உ - ம்:- தாம் வந்தார், தாம் வந்தன என வரும்.

வாளாது பன்மை என்றமையின் ஆண் பன்மையும பெண்பன்மையும எனக் கொள்க. (௩௰)

தானென் கிளவி ஒருமைக் குரித்தே. (188)

என் - எனின், தான் என்னும சொல் திணைக்குரித் தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- தான் என்னும் சொல் இருதிணை ஒருமைக்கும் உரித்து என்றவாறு.

உ - ம்:- தான் வந்தது, தான் வந்தான், தான் வந்தாள் என வரும்.

வாளாதே ஒருமை என்றமையின் பெண்பால் மேலும், ஆண்பால் மேலும் கொள்க. (௩௧)

எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே. (189)

என் - எனின், எல்லாம் என்னும் சொல் திணைக் குரித்தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- எல்லாம் என்று சொல்லப்படும் பெயராகிய நிலைமையையுடைய சொல் இருதிணைப் பன்மையிடத்தையும கருதிய நிலைமைத்தாகும் என்றவாறு.

உ - ம்:- எல்லாம் வந்தார், எல்லாம் வநதீர், எல்லாம் வந்தன, எல்லாம் வந்தேம் எனவரும்.

வாளா பன்மை என்றமையின் இரண்டிடத்தும் ஆண் பன்மையும் பெண் பனமையும கொள்க. (௩௨)

தன்னுள் ளுறுத்த பன்மைக் கல்லது
உயா திணை மருங்கின் ஆக்கம் இல்லை. (190)

என் - எனின், எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ - ள்:- மூன்றிடத்தும் இருதிணைமேலும் சென்றமையின் தன்மையிடத்து அஃறிணைக்கண் ஆகாது என்றமையான், எல்லாம் என்னும் சொல் சொல்லுவான்றன்னை உள்ளுறுத்து அஃது அஃறிணை மொழி கூறாமையின் அஃறிணைத் தன்மைப் பன்மைக்கு உயர்திணை யிடததல்லது அஃறிணையிடத்து ஆகுதல் இல்லை என்றவாறு.

உயர்திணை மருங்கின் அல்லது என மொழிமாற்றிக் கொள்க.

உ - ம்:- எல்லாம் உண்டும் என்பது.

மற்று இஃது அஃறிணை மொழி கூறாமையின் அஃறிணைத் தன்மை இல்லை என்பது பெறுதுமாகலின் இது கூறல் வேண்டா எனின், மேல் "பல்வழி நுதலிய நிலைத்தாகும்" என அதற்கு விதி சென்றமையின் அது விலக்கல் வேண்டும் என்பது. மற்று எல்லாம் உண்டும் என்ற தன்மைககண் வருகின்ற வாவினை உயர்திணைப் பெயராக வேறோதற்பாற்று எனின், எல்லாம் என்பது போல உயர்திணைககே உரித்தானது முன்னிலைக் கண்ணும் படர்கைக்கண்ணும் விரவா நிற்றலின் ஈண்டேயோத இன்னுழிவரவின்றி உயர்திணைப் பெயராம் என்றவாறு. (௩௩)

நீயிர் நீயென வரூஉம் கிளவி
பாறெரி பிலவே உடன்மொழிப் பொருள. (191)

என் - எனின், நீயிர் நீ என்பனவற்றைத் திணைக் குரித்தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- நீயிர் எனவும் நீ எனவும் வரூஉம் சொற்கள் திணை தெரிபில, உயர்திணையாயும் அஃறிணையாயும் உடனுணர்த்தலைப் பொருண்மையாக வுடைய என்றவாறு.

மற்றுத் திணை தெரியாமையின் அன்றே விரவுப் பெயராவது; இது சொல்லவேண்டுமோ எனின், மேல் விரவுப் பெயர்களைத் "தத்தம் வினையோடல்லது பால் தெரிபில" என்றமையின், இயையும். தத்தம மரபின் திணையான் உணரற்பாடு சென்றமைகண்டு இவை முன னிலைப் பெயராகலின் இவற்றுக்கு வரும் முன்னிலை வினையும் விரவாவாகலான் எய்தியது விலக்குதற்குக் கூறினர் என்பது.

உ - ம்:- நீயிர் வந்திர், நீ வந்தாய் என்பன; திணை கண்டுகொள்க. (௩௪)

அவற்றுள்,
நீஎன் கிளவி ஒருமைக் குரித்தே. (192)

என் - எனின், நீ என்னும் சொல் பாற்குரித்தா மாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- இவ்விரண்டனுள்ளும் நீ என்னும் சொல் இருதிணை முன்னிலை ஒருமைக்குரித்தாம் என்றவாறு.

உ - ம்:- நீ வந்தாய் எனவரும்.

இது இரு பாற்கும உரித்தாயவாறு கண்டுகொள்க. அஃறிணைக்கண்ணும் பெண் ஒருமைக்கண்ணும் ஆண் ஒருமைக கண்ணும் கொள்க

सूतः—

शृणुध्वमृषयः पुण्यां कथां पापप्रणाशिनीम् ।
माहात्म्यं देवदेवस्य महादेवस्य धीमतः ॥
पुरा पितामहं देवं मेरुशृङ्गे महर्षयः ।
प्रोचुः प्रणम्य देवादिं किमेकं तत्त्वमव्ययम् ॥
स मायया महेशस्य मोहितो लोकसम्भवः ।
अविज्ञाय परं भावमृषीणामेवमुक्तवान् ॥
अहं धाता जगद्योनिः स्वयम्भूरेक ईश्वरः ।
अनादिमपरं ब्रह्म मामभ्यर्च्य विमुच्यते ॥
अहं हि सर्वलोकानां प्रवर्तकनिवर्तकः ।
न विद्यते चाप्यधिको मत्तो लोकेषु कश्चन ॥
तस्यैवं म(न्य) मानस्य यज्ञनारायणोंऽशतः ।
प्रोवाच प्रहसन्रोषात् परिपाटललोचनः ॥
किं कारणमिदं ब्रह्मन्वर्तते तव साम्प्रतम् ।
अज्ञानं योगयुक्तस्य नत्वेतदुचितं तव ॥
अहं धाता हि लोकानां यज्ञो नारायणः प्रभुः ।
न मामृतेऽस्य जगतो जीवनं सम्भवेत् क्वचित् ॥
अहमेव परं ज्योतिरहमेव परा गतिः ।
मत्प्रेरितेन भवता सृष्टं भुवनमण्डलम् ॥
एवं विवदतोर्मोहात्परस्परजयैषिणोः ।
आजग्मुर्यत्र तौ देवौ वेदाश्चत्वार एव हि ॥
अन्वीक्ष्य देवं ब्रह्माणं यज्ञ नं च संस्थितम् ।
प्रोचुः संविग्नहृदया धा....... .... ..ष्ठिनः ॥

ऋग्वेदः—

यस्यान्तःस्थानि भूतानि यस्मात्सर्वं प्रवर्तते ।
यदाहुस्तं परं तत्त्वं स एव स्यान्महेश्वरः ॥

यजुर्वेदः—

यो यज्ञैरखिलैरीशो योगेन च समा (धिना) ।
(यमाहु)रीश्वरं देवं स देवः स्यात्पिनाकधृक् ॥

सामवेदः—

येनेदं भ्राम्यते चक्रं यदाकाशान्तरं महत् ।
योगिभि र्वेद्यते तत्त्वं महादेवः स शङ्करः ॥

अथर्ववेदः—

............पश्यन्ति देवे ....परम् ।
महेशं पुरुषं रुद्रं स देवो भगवान्भवः ॥
एवं स भगवान् ब्रह्मा वेदानामीरितं शुभम् ।
कथं तत्परमं ब्रह्म'(सर्व)सं(ङ्ग)(वि)वर्जितम् ॥
प्रमथैश्चातिगर्वितैः ।
इतीरिते स भगवान् प्रणवात्मा सनानतः ॥
अमूर्तो मूर्तिमान्भूत्वा वचः प्राह पितामहम् ।

प्रणवः—

नह्येषांगवरन् ....त्मको........ ।
कदाचिद्रमते रुद्रस्तादृशोऽपि महेश्वरः ॥
अयं स भगवानीशः स्वयं ज्योतिः सनातनः ।
स्वानन्दभूता कथिता देवी ना(ग)न्तुका शिवा ॥
इत्येवं प्रणवाच्छ्रोतुः शास्त्रमूर्तेरजस्य तु ।
अज्ञानमगमन्नाशमीश्वरस्यैव मायया ॥
तदन्तरे महज्ज्योतिर्विरिञ्चो विश्वभावनः ।
प्रापश्यदद्भुतं दिव्यं पूरयन्गगनान्तर(म) ॥
तन्मध्यसंस्थं विमलं मण्डलं तेजसोज्वलम् ।
व्योम मध्यगतं शुभ्रं प्रादुरासीद् द्विजोत्तमाः ।
स दृष्ट्वा वदनं दिव्यं मूर्ध्नि लोकपितामहः ॥
तेन तन्मण्डलं सौरमालोकयदनिन्दितम् ।
प्रजज्वालातिकोपेन ब्रह्मणः पञ्चमं शिरः ॥
क्षण(ा)द्दृश्य महान् पुरुषो नीललोहितः ।
त्रिशूलः पिङ्गलो देवो नागयज्ञोपवीतवान् ॥

तं प्राह भगवान्ब्रह्मा शङ्करं नीललोहितम् ।
जानामि भवतः पूर्वं ललाटे मम शङ्कर ॥
प्रादुर्भावं महेशान मामेव शरणं व्रज ।
श्रुत्वा सगर्वं वचनं पद्मयोनेरथेश्वरः ॥
ससर्ज स्वात्मनः कश्चिद्भैरवं लोकदाहकम् ।
स्वयं साक्षान्महादेवः क्षणार्द्धे कालभैरवः ॥
चकर्त करजाग्रेण ब्रह्मणः पञ्चमं शिरः ।
निकृत्तवदनो देवो ब्रह्मा देवेन शम्भुना ॥
ममार चेशयोगेन जीवितं प्राह विश्वसृक् ।
तत्कन्धरान्तः संजातनिःसृतैः शोणितप्लवैः ॥
जगन्मग्नं तदा देवो वह्निनेत्रोद्भवस्य तु ।
ज्वाला लेशस्य..............तिं रक्तवारिधिम् ॥
कपालगह्वरगतं रक्तमांसादिकं तथा ।
तेनैवाशोषयत्सद्यो ज्वरलेशेन भैरवः ॥
अथान्वपश्यद्गिरिशं मण्डलान्तरसंस्थितम् ।
समासीनं महादेव्या महादेवं त्रिलोचनम् ॥
भुजङ्गराजवलयं चन्द्रावयवभूषणम् ।
कोटिसूर्यप्रतीकाशं जटाचूडविराजितम् ॥
शार्दूलचर्मवसनं दिव्यमालासमन्वितम् ।
त्रिशूलपाणिं दुष्प्रेक्ष्यं योगिनं भूतिभूषणम् ॥
यदन्तरा योगनिष्ठाः प्रपश्यन्ति हृदीश्वरम् ।
(य)दादिमेकं ब्रह्माणं ब्रह्मा देवं ददर्श ह ॥
यस्य सा परमा देवी शक्तिराकाशसंज्ञिता ।
सोऽनैकैश्वर्ययोगात्मा महेशो दृश्यते किल ॥
यस्य ब्रह्मादयो देवा ऋषयो ब्रह्मवादिनः ।
अर्चयन्ति सदा लिङ्गं विश्वेशः खलु दृश्यते ॥

என்பது முதலானவைகளாலும், விஷ்ணு ஜகத்பதி அல்ல என்றதற்கு முன்னுதாகரித்துக் காட்டிய ரத்த பிக்ஷாடன வசனத்தாலும் பிறவாற்றாலும் காண்க.

அன்றி, சுவச்சந்தம் கங்காவதாரபடலத்தில்,

कथं गङ्गा समुत्पन्ना सुरसिद्धनमस्कृता ।
कथयस्व प्रसादेन समासात्सुरसत्तम ॥

எனத்தேவி வினவியதற்கு,

गङ्गायाश्च समुत्पत्तिं कथयिष्यामि सुव्रते ।
जगन्माता महादेवी मम पत्नी पुरा हि सा ॥
मम नेत्रोदकं चैव करे तत्त्वार्जितं त्वया ।
पुनरुद्घाटिते नेत्रे जगन्माता स्वयं पुरा ॥
मम नेत्रेऽस्रवत्तोयं त्वदीयाङ्गुलिभिः प्रिये ।
दशधा निःसृता गङ्गा कपालाभरणैर्मम ॥
सप्तैव संस्थितास्तत्र एका विष्णुपुरे स्थिता ।
द्वितीया ब्रह्मलोके तु तृतीया सत्यलोकगा ॥
स्वर्गे चैव पुनश्चाथ संस्थिता सोममण्डले ।
सोमाच्चैव विनिःसृत्य पुरागामे व्यवस्थिता ॥
तदेवं संस्तुतो देवो ब्रह्मविष्णुपुरः सरैः ।
गङ्गानदी महापुण्या मर्त्यानां हितकाम्यया ॥
अवतार्य महादेवि मर्त्यलोकं विसृज्य च ।
ततो यदा सुरेशानि उक्ता सा त्वं पुरोदिता ॥
लोकानां च हितार्थाय आगच्छ सुरसुन्दरि ।
आवृत्य मम मूर्धानं मेरुमूर्ध्नि पुरा गता ॥
तस्मान्निर्गत्य देवेशि चतुर्दिक्षूदधिं गता ।

என பைரவர் சொன்னதாக வருமாற்றால இந்த வைரவர் ருத்திரகண பேதங்களுள் ஒருவருமன்று. ஸாக்ஷாத் ஸ்ரீகண்டநாத ருத்திரமூர்த்தி பேதமாய்க் கைலாசவாசியாய் இருக்கிறவரே. அது அந்தச் சுவச்சந்தத்தின் ஆதியிலே,

कैलासशिखरासीनं भैरवं लोकनायकम् ।
स्तूयमानं महादेवं गणमात्रनिषेवितम् ॥
सृष्टिसंहारकर्तारं विलयस्थिति कारणम् ।
अनुग्रहकरं देवं प्रणतार्तिविनाशनम् ॥
मुदितं भैरवं दृष्ट्वा देवी वचनमब्रवीत् ।

என வருமாற்றானும் உணர்க. 26

27. * * *

மந்திரருக் கிறையாகும் என்பது அஷ்ட வைரவ சுவரூபம் கூறுகின்றது. அதிலேயே,

द्वितीया वरणे देवि विन्यसेद्भैरवाष्टकम् ।
कपालीशं तु पूर्वे तु आग्नेय्यां शिखिवाहनम् ॥
दक्षिणे क्रोधराजं तु विकरालं तु नैर्ऋते ।
मन्मथं पश्चिमे भागे मेघनादेश्वरं तथा ॥
वायव्ये चैव विन्यस्य सोमराजं तथोत्तरे ।
विद्याराजं तथेशान्यां विन्यसेत्तु स्वभावतः ॥
पञ्चवक्त्रास्त्रिणेत्राश्च दशबाह्विन्दुशेखराः ।
कपालमालाभरणाः स्फुरन्माणिक्यमण्डिताः ॥

என வருமாற்றான் உணர்க. 27

28. * * *

"இவ்விந தேசாவரணம்" என்பது முற்கூறிய வாறும பிறவும ஆவரணமுடையராய்த் தேவியோடும கூடி இருககிற வைரவரே ஜகத்பதியாகலின் அவ்வாகம விகித தீக்ஷாதிகளோடும் அவரை வழிபடு நெறியான் வழிபடச் சித்திமுத்தி இரண்டும பெறலாம் என்கின்றது.

ஈண்டுத் தேவியவள் ஒருத்தி என்பதற்கு வருமாறு: சுவச்சந்தத்தில்,

भैरवं पूजयित्वा तु तस्योत्सङ्गे तु तां न्यसेत् ।
यादृशं भैरवं रूपं भैरवीं तद्वदेव हि ॥
ईषत्करालवदनां गम्भीरविपुलस्वराम् ।
प्रसन्नास्यां सदा ध्यायेत् भैरवीं विस्मितेक्षणाम् ॥

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. மற்றனைத்தும் மேலே விளங்கும். 28

29. * * *

"ஒழுகுநெறி" என்பது வைரவ சைவ தீக்ஷையுடையோர் ஒழுக்கமும அதன்பயனும கூறுமுகத்தால் வைரவமத சங்கற்பத்தை உபசங்கரிககின்றது. ஈண்டுக கூறியவற்றுள் சிலவற்றிற்கு வருமாறு:— சுவச்சந்தத்தில்,

साधको द्विविधस्तत्र शिव धर्मैकतः स्थितः ।
शिवमन्त्रविशुद्धाध्वा साध्यमन्त्रनियोजितः ॥
ज्ञानवांश्चाभिषिक्तश्च मन्त्राराधनतत्परः ।
त्रिविधायास्तु सिद्धेर्वै सोऽत्रार्हः शिवसाधकः ॥
द्वितीयो लोकधर्मस्थइष्टापूर्तविधौ रतः ।
कर्मकृत्फलमाकाङ्क्षन्शुभैकस्थोऽशुभान्वितः ॥
तस्य कार्यं सदा मन्त्रैरशुभांशविनाशनम् ।
गृहस्थो वा यतिर्वा स्यादाश्र(येच्चे) मे कतमे स्थितः ॥
मुमुक्षुर्द्विविधः प्रोक्तो निर्बीजो बीजवान् पुनः ।
बालबालिशवृद्धस्त्रीभोगभुग्व्याधितात्मनाम् ॥
तेषां निर्बीजिका दीक्षा समयादिविवर्जिता ।
विनिर्द्वन्द्वसद्वानां तु सबीजा कीर्तिता प्रिये ॥

दीक्षा तु ग्राहिका तेषां समयाचारसम्युता ।
विशेषसमयाचारा मन्त्रस्था ये प्रकीर्तिताः ॥
ते तत्र पाल्या यत्नेन मोक्षसिद्धिं समीहिताः ।
सबीजा सा तु विज्ञेया पुत्रकाचार्ययोषितः ॥
गृहस्थोऽप्याश्रमी चाथ यदि संकल्प्य दीक्षयेत् ।

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. அதிலேயே,

दशलक्षं जपेद्यस्तु एकचित्तः समाहितः ।
स समुद्रगामिनी तीरे सहायपरिवर्जितः ॥
होमयेन्नरमांसस्य लक्षमेकं वरानने ।
गुग्गुलास्तस्य देवेशि ब्रह्मचर्यव्यवस्थितः ॥
(अ सा) ध्यं साधयेद्देवि नात्र कार्या विचारणा ।

என்றற் ரொடக்கம் வருவனவும் காண்க. இனித் தத்துவத் தியான விஷயத்தில்:— சுவச்சந்தத்தில் தத்துவவிஞ்ஞான படலத்தில்,

....पृथ्वी रूपेण चतुःसागरमेखलाम ।
सर्वसत्त्ववनाकीर्णां मृगपक्षिसमाकुलाम् ॥
सुस्थिरां पीतवर्णाभामुद्भि...ज समन्विताम् ।
ध्याता सिद्धिमवाप्नोति विषसत्त्वानि नाशयेत् ॥

எனவும் பிறவும் வருமாறுண்டுணர்க. ஈண்டெழுதிற் பெருகும். மற்றும் இம்மத சித்தாந்தம் சுவச்சந்த முதலியவைகளில் விரியக் கூறுமாற்றானுணர்க. 29

வைரவ சைவமதம் முற்றும்.

இனி இதன் மறுதலை

30. * * *

"வந்தஇந்தத் தந்திரமும்" என்பது வைரவ சைவ சித்தாந்த மறுப்புக கூறியது. ஈண்டு 'வந்த இந்தத் தந்திரமும வைரவர் தம் ஊர்த்துவ வதனத்து' என்றது,

शैवं पूर्वमुखोत्पन्नं दक्षे कालमुखं तथा ।
पश्चिमे पाशुपतकमुत्तरे तु महाव्रतम् ॥
ऊर्ध्ववक्त्रे तु भैरवं वामं पातालमुच्यते ।

என்பது மதத்தோடொத்த வாமசமய தக்கிண தந்திர பேதமான ஞானசித்தி வசனமாகலின், இதனைச் சித்தாந்தமாககி மற்றப் பாசுபதாதிகளைப் பூருவபக்ஷமாகக கருதுவதற்குக் கூறியதென்க. வைரவர்க்கு மைந்துமுகம் உண்டென்பது முற்கூறினும். இவ்வாறு பசுபதி ருத்திரர் முதலாயினோராற் கூறப்படும் பாசுபதாதிகட்கு மொகரும் அவர்கட்கு மைந்துமுக முண்டாகலின். இதனையன்றே பாசுபதாதிகளை இரௌத்திர சைவமெனப் பூருவபக்ஷமாகக கூறுவதூஉம். அது, சுப்பிரபேதத்தில்,

तदेवं सौम्यमाख्यातं सिद्धान्तं हि तदेव यत् ।
तदन्यद्रौद्रमाख्यातं तन्त्रं पाशुपतादिकम् ॥

என்பதனாற் காண்க. வைரவதந்திரம் வைரவர் சொன்னார் என்பது. சுவச்சந்தம் முதற்படலத்தில்,

मुदितं भैरवं दृष्ट्वा देवी वचनमब्रवीत् ।
यत्त्वया कथितं मह्यं स्वच्छन्दं भैरवेश्वरम् ॥
शतकोटिप्रविस्तीर्णं (भुक्तिमुक्ति) प्रदं (शुभम) ॥

என்பதனால் உணர்க. இவ்வாறாயின்,

लौकिकं वैदिकं चैव तथाध्यात्मकमेव च ।
आतिमार्गं च मन्त्राख्यं तन्त्रमेकमनेकधा ॥
सद्योजातमहाघोरपुरुषेशानमूर्तयः ।
प्रत्येकं पञ्चवक्त्राः स्युस्तैरुक्तं लौकिकादिकम् ॥

திருத்தொண்டர் புராணச் சொற்பொழிவுத் தொடக்கவிழா.

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான, திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வர சுவாமி தேவஸ்தானம், ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி சந்நிதியில், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம், நிகழும், கர ஹூ புரட்டாசிமீ 21-ம் நாள் (7—10—51) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இத்தொடக்க விழா நடைபெற்றது.

உயர்திரு G. M. முத்துசாமிப்பிள்ளை B.A., அவர்கள் (Personal Asst. to the District Collector,) விழாத்தலைமை ஏற்றார்கள். உயர்திரு. R. கிருஷ்ணமூர்த்தி B. A., B. L., அவர்கள் (District Munsif, Thiruvaiyaru.) திறப்புரை கூறினார்கள். உயர்திரு. S. இராமச்சந்திர பத்தர் B.A., அவர்கள் (English Head Clerk, Collector's Office, Tanjore.) உயர்திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டமான் M A., அவர்கள் (District Development Officer, Tanjore.) உயர்திரு. பெ. திருஞானசம்பந்தம் M.A., அவர்கள் (தலைவர், அரசர் கல்லூரி, திருவையாறு.) வித்துவான், உயர்திரு. இராம. கோவிந்தசாமிப்பிள்ளை அவர்கள் (தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.) ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் (இராஜாங்கக் கட்டளை, கட்டளை விசாரணை, திருவாரூர்) ஆகியோர் பெரிய புராணச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமிப்பிள்ளை அவர்கள், பிரதி - சோமவாரந்தோறும். தொடர்ந்து திருத்தொண்டர் புராணச் சொற்பொழிவாற்றி வருவார்கள். அன்பர்கள் வந்து கேட்டு இறையருள் பெற்று உய்வார்களாக.

சிவஸ்தலங்களில் அபிஷேக ஆராதனை.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், இராமேசுவர யாத்திரையில் 24—9—51 அன்று இராமேசுவரம் ஸ்ரீ இராமநாதப்பெருமான் ஆலயத்திற்கு எழுந்தருளியானபோது அபிஷேக ஆராதனை செய்வித்துத் தலப்பதிகவெளியீடும் வழங்கப்பெற்றது வழக்கம்போல் மகா சந்நிதானம் அவர்களின் இம்மாத ஜன்ம நக்ஷத்திர நன்னாளாகிய 1—10—51 அன்று திருப்பூந்துருத்தி ஸ்ரீ புஷ்பவனநாதசுவாமி ஆலயத்தில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனை நடைபெற்றது. அச்சிட்ட தலப்பதிகமும் அன்பர்கட்கு வழங்கப் பெற்றது.

Regd. No. M. 4454. GNANASAMBANDAM

திருப்பனந்தாள்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி

ஸ்ரீ கந்தவேள் கழகத்தில் நடைபெற்ற

கலைமகள் விழாத் - திருக்குறட் - சொற்பொழிவுகள்.

1—10—51 வித்துவான், திரு. மு. கோவிந்தராசன் அவர்கள் தலைமையில் அ. பாலசுப்பிரமணியன் "வழிபாடு", க. இளங்கோவன் "உடைமையுள் உண்மை"; 2—10—51 வித்துவான், திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள் தலைமையில் நா. மாணிக்கம் "உலகியல்", உ. முருகன் "உயிர் ஊதியம்"; 3—10—51 திரு. தி மீனாட்சிசுந்தர நாயனார் அவர்கள் தலைமையில் ச. சுப்பிரமணியன் "சீரியோர் சேர்க்கை", அ. சிவராமசேது "செங்கோல்"; 4—10—51 பனசை ரெவின்யூ இன்ஸ்பெக்டர், திரு. மு. பொன்னுசாமி முதலியாரவர்கள் தலைமையில் க. சாமிநாதன் "நாகரிகம்", ஆ. முருகேசன் "உள்ளக் கிளர்ச்சி"; 5—10—51 குடந்தை தாசில்தார், திரு. T. மருதப்ப பிள்ளை M.A., அவர்கள் தலைமையில் கே ஆழ்வார்சாமி "சொற் செலவு', கு. வேங்கடேசன் "வளந்தருநாடு'; 6—10—51 பனசை பிரின்சிபால், திரு. K. M. வேங்கடராமையா M.A., B.O.L., அவர்கள் தலைமையில் மா. திருநாவுக்கரசு "உலகப்பேய்", பே. மு. இராச கோபாலன் "கூடினும் கூடாதே"; 7—10—51 பனசை F. S. O. திரு. T. இராமதாஸ் அவர்கள் தலைமையில் க. கொன்றையாண்டி "இறப்பும் இனிதே", தி. சுப்பிரமணியன் "மாந்தர் சிறப்பு"; 8—10—51 வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தியவர்கள் தலைமையில் ம. ரா. கிருட்டினமூர்த்தி "நிரப்பு", வே. இராமாநுசம் "இன்பம்". கல்லூரி வீணையாசிரியர், சங்கீதபூஷணம், திரு. இரா. சண்முகசுந்தரம் பிள்ளையவர்களும், மிருதங்க வித்துவான், திரு. கு. பாலகுருநாதன் பிள்ளையவர்களும் இன்னிசை விருந்து அளித்தார்கள்.

நோட்டீஸ்

ஜனங்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதைக் குறித்த (வாக்காளர் ஜாபிதாக்களைத் தயாரிப்பதுபற்றிய) 1950 வருஷத்திய விதிகளின்படி சென்னை லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளிக்குரிய மாயூரம் தொகுதியின் வாக்காளர் ஜாபிதா இன்று முடிவாகப் பிரசுரிக்கப்பட்டதென்பது இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

தேதி:- 4—10—51,
இடம்:- மாயூரம்.

எஸ் தேவராஜன்
எலக்ட்ரோல் ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீசர்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—10—1951.